# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

ilakku.org

வாராந்த மின்னிதழ்

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 300 சனி, ஆகஸ்ட் 17, 2024 20 பக்கங்கள்


தமிழின விடிவிற்காக
நீண்டகாலமாகப் பாடுபட்டுவந்த
**திரு.விராஜ் மெண்டிஸ்**
அவர்கள் காலமானார்



இலக்கின் சார்பில் எமது புகழ் வணக்கம்



செஞ்சோலைப் படுகொலையின் 18ஆம் ஆண்டு
நினைவுகளை நெஞ்சில் சுமந்து...

# நான்கு முனைப் போட்டியும் தமிழ்ப் பொது வேட்பாளரும்

அகிலன்

# தேர்தல் நெருங்கும் போது தமிழரசும் வழிக்கு வரும்!



சமூக, அரசியல் செயற்பாட்டாளர் **செல்வின்** செவ்வி






# உக்ரைனின் போர் வியூகத்தை ரஸ்யா முறியடிக்குமா?

வேல்ஸில் இருந்து அருஸ்



© 2024 இலக்கு இணையம்

## இனப்படுகொலை நினைவுத்தூபி விவகாரம்: கனடா தூதரை அழைத்து இலங்கை கண்டனம்

கனடாவின் பிரம்டனில் தமிழர் இனப்படுகொலை நினைவுத் தூபியை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டமைக்கு கனடா தூது வரை அழைத்து இலங்கை தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

“கனடாவின் வாக்குவங்கி அரசியலுக்காக தொடர்ந்து பரப் பப்படும் இந்த பொய்யான கதையை இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக நிராகரிப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, தெரிவித்துள்ளார்.

முன்னதாக புலம்பெயர் தமிழர்களால் கனடாவின் பிரம்டன் நகரில் தமிழினப்படுகொலை நினைவுத்தூபியை நிர்மாணிப் பதற்குமேற்கொள்ளப்பட்டிருக்கும் முயற்சிக்கு உதவவேண்டாம் என வலியுறுத்தி பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுனுக்கு கனடாவின் டொரன்டோ நகரிலுள்ள இலங்கை கொன்சியூலர் துஷார ரொட்ரிகோ கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

இந்த நிலையில், இலங்கை யின் கடிதத்தின் உள்ளடக்கத்துக்குப் பதிலளிக்கும் வகையில் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் மேயர்பற்றிக்பிரவுன், ‘எமது உள்ளக விவகாரங்களில் இனப்படுகொலை புரிந்த இலங்கை அரசாங்கத்தினால்

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

## மீண்டும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய பிரித்தானியார்கள் விருப்பம்

ஐரோப்பிய ஒன்றியத்தில் மீண் டும் இணைந்து கொள்வதற்கு அரை பங்கிற்கும் மேற்பட்ட பிரித்தானிய மக்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாக YouGov என்ற நிறுவனம் கடந்த மாதம் மேற் கொண்ட வாக்கெடுப்பில் தெரிய வந்துள்ளதாக அந்த நிறுவனம் கடந்த செவ்வாய்க் கிழமை(13) வெளியிட்ட அறிக்கையில் தெரிவித் துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிந்து செல்வதற்கான வாக்கெடுப்பைபிரித்தானியாஎட்டு வருடங்களுக்கு முன்னர் நடத்தி யிருந்தது. அதில் 50 விகிதத்திற்கு மேற்பட்ட மக்கள் ஆதரவாக



வாக்களித்ததால் அது ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிந்து சென்றிருந்தது.

2000 மக்களிடம் இந்த நிறு வனம் தனது கருத்துக்கணிப்பை மேற்கொண்டிருந்தது அதில் 59 விகிதமானவர்கள் மீண்டும் இணை வதற்கு விருப்பம் தெரிவித்திருந்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

## ஜனாதிபதித்தேர்தலில் தமிழ்ப்பொது வேட்பாளர்:

### தமிழ் மக்களிடம் சி.வி.விக்னேஸ்வரன் வேண்டுகோள்

தமிழ் மக்களின் அடையாளமாக விளங்கும் பா.அரியேத்திரனு க்கு அனைத்து தமிழர்களும் வாக் களிக்க வேண்டும் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் ஊடக சந்திப்பொன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் ‘தமிழ் பொது வேட்பாளரான பா.அரியேத்திரன் சங்கு சின்னத்தில் போட்டியிடுகி றார். ஜனாதிபதித் தேர்தலில் கட்சி சார்பில் சிந்திக்காமல் தமிழ் மக்கள் சார்பில் சிந்திக்க வேண்டும். இதற் கான கட்டாயம் தற்போது தோற்றம் பெற்றுள்ளது.

கட்சி ரீதியில் முரண்பட்டுக் கொண்டிருக்காமல் தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்து சிந்தித்து ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். தமிழ் மக்களின் அடையாளமாக



பா.அரியேந்திரனை 89 கட்சி தரப்பினர் தேர்ந்தெடுத்துள்ளார்கள். இனி அவரை பற்றியோ, அவரின் கட்சி பற்றியோ பேசுவது அவசிய மில்லை.

தமிழ் மக்களின் அடையாள மாக விளங்கும் அரியேத்திரனுக்கு சகல தமிழ் மக்களும் வாக்களிக்க வேண்டும். தமிழ் வேட்பாளர் விவகாரத்தில் இலங்கைத் தமிழர சுக் கட்சி உறுதியான தீர்மானத்தை எடுக்காமல் இருப்பது மன வருத் தத்துக்குரியது’ என்றார்.

## ரஸ்யாவுடன் 1.2 பில்லியன் டொலர் அணுசக்தி உடன்பாடு– இந்தியா அறிவிப்பு



ரஸ்யாவிடம் இருந்து மேலதிக அணுசக்தி எரிபொருட்களை யும், உதிரிப்பாகங்களையும் 1.2 பில்லியன் டொலர்கள் பெறுமதி யில் கொள்வனவு செய்வதன் மூலம் தமிழ் நாட்டில் ரஸ்யா வின் உதவியுடன் கட்டப்பட்ட கூடாம் குளம் அணுமின் நிலையத்தை தரமுயத்தும் நடவடிக்கையை இந் தியா மேற்கொண்டு வருவதாக இந்திய ஊடகம் கடந்த செவ்வாய்க் கிழமை(13) தெரிவித்துள்ளது.

கூடாம்குளம் அணுமின் நிலையம் தற்போது இரண்டு மின் உற்பத்தி பிரிவுகளைக் கொண்டுள் ளது. அதன் மூலம் 1,000 மெகாவற் மின் உற்பத்தி செய்யப்படகின்றது. இந்த மின்சாரமே தமிழகத்தின் மின் தேவையையும், ஏனைய மாநிலங்களின் மின் தேவையையும் அதிகம் பூர்த்தி செய்கின்றன.

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

## இந்தியாவிற்கு காணிகளை விற்காதே :

### திருகோணமலை மக்கள் போராட்டம்

திருகோணமலை மாவட்டம் பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முத்து நகர்பகுதியில்வெளிநாட்டு அல்லது உள்நாட்டு நிறுவனங்களுக்கு மக்கள் காணிகளை துறை முக அதிகார சபையினர் குத்தகைக்கோ அபகரிப்பு செய்யவோ விட கூடாது என மக்கள் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இந்தியாவிற்கு காணிகளை விற்காதே, எங்கள் நிலம் எங்க ளுக்கு, போன்ற வாசகங்களை ஏந்தி முத்து நகரில் குறித்த பகுதி மக்க ளால் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கப்பல் துறை, முத்து நகர் போன்ற பகுதியில் மக்கள் விவ சாயத்தை நம்பி வாழ்ந்து வரு கின்றனர். இக் காணிகள் இலங்கை துறை முக அதிகாரசபைக்கு சொந்த மானது என அதனை வெளிநாட்டு



களுக்கு தாரை வார்க்க வேண்டாம் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இருந்த போதிலும் குறித்த பகுதிக் குள் மக்கள் கவனயீர்ப்பு போராட் டங்களை முன்னெடுக்க முடியாது என திருகோணமலை நீதிமன்ற நீத வானால் தடை உத்தரவு வழங்கப் பட்டுள்ளது என சீனக் குடா காவல் துறையினர் நால்வர் அடங்கிய பெயரை குறித்து தடை உத்த ரவை வழங்கியுள்ளதாக குறித்த

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

## அயோத்தியில் 50 இலட்சம் ரூபாய்கள் பெறுமதியான மின்குமிழ்கள் திருட்டு

இந்தியாவின் உத்தரப்பிரதேசத் தின் அயோத்தி நகரத்தில் புதிதாக 200 மில்லியன் டொலர்கள் செலவில் அமைக்கப்பட்ட ராமர் ஆலயத்தில் பொருத்தப்பட்டிருந்த பெருமளவான மின்குமிழ்கள் திரு டப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங் கள் கடந்த புதன்கிழமை(14) செய்தி வெளியிட்டுள்ளன.


ராமர்ஆலயத்திற்கு செல்லும் வழியில் உள்ள மரங்களில் பொரு த்தப்பட்டிருந்த 3,800 bamboo lights வகை மின்குமிழ்களும், 36 projec-



tor lights வகை மின்குமிழ்களும் திருடப்பட்டுள்ளன.

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

## ஒலிம்பிக் விளையாட்டு விழா நிறைவு பெற்றது



பாரிஸ் ஒலிம்பிக் விளை யாட்டுகளின் நிறைவு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை (11) வண்ணமயமான கலை நிகழ்ச்சியு டன் சிறப்பாக நடைபெற்றது.

70,000க்கும் அதிகமானோர் பிர மாண்டமான நிறைவு விழாவில் கலந்துகொண்டனர்.

கடந்த ஜூலை 26 ஆம் தேதி தொடங்கிய இந்த விழாவில் 26 நாடுகளைச் சேர்ந்த சுமார் 10,000 மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள் பங்கேற்று தங்களு டைய திறமையை வெளிப்படுத்தி னர்.

32 விளையாட்டுப் போட்டி

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

## ஊடகத்துறையினர் மீதான யாழ் மருத்துவமனையின் வன்முறை கண்டனத்திற்குரியவை

*யாழ் மருத்துவமனைக்கு தனது சிகிச்சைக்காக சென்ற சுயாதீன ஊடகவியலாளர் கிருஸ்ணா மீது கடந்த ஜுலை மாத இறுதியில் யாழ்வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தியும், அவரின் உதவியாளர் வைத்தியர் பிரணவனும் தமது தனிப்பட்ட விரோதம் காரணமாக அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்ததுடன், சிகிச்சைக்கு சென்ற நோயாளியை அச்சுறுத்தியது மிகவும் கண்டனத்திற்கு உரியது என இலக்கு ஊடகம் தனது கண்டனத்தில் தெரிவித்துள்ளது.*

*இது தொடர்பில் செவ்வாய்க்கிழமை(13) வெளியிடப்பட்ட அறிக்கையில் இலக்கு ஊடகம் மேலும் தெரிவித்துள்ளதாவது:*

*வைத்தியர் அர்ச்சுணா வெளிக்கொண்டுவந்த சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் ஊழல்கள் தொடர்பில் பல ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் தமது கருத்துக்களையும், விமர்சனங்களையும் பதிவுகளையும், ஊடகங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் வெளியிட்டு வருகின்றனர்.*

*இது அந்த மக்களின் இன்னல்களை வெளிக்கொண்டுவரும் ஒரு கருத்துச் சுதந்திரமான நடவடிக்கையாகும். கருத்து சுதந்திரம் என்பது மக்களின் அடிப்படை உரிமையாகும், அதேபோலவே ஊடக சுதந்திரம் என்பது ஊடகவியலாளர்களின் அடிப்படை உரிமையாகும். ஆனால் அந்த சுதந்திரத்தை இலங்கை காவல்துறையின் துணையுடன் யாழ் வைத்தியசாலை நிர்வாகம் முறைகேடாக பயன்படுத்துவதை நாம் அனுமதிக்க முடியாது.*

*அதிலும் குறிப்பாக வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்றவரை தடுத்து வைத்து சட்டவிரோதமாக விசாரணைகளை மேற்கொண்டதுடன், அவரை இலங்கை காவல்துறை அதிகாரியின் உதவியுடன் மிரட்டியது என்பது அடிப்படை மனி உரிமை மீறலாகும்.*

*ஊடகவியலாளர்கிருஸ்ணாவுக்கு விடுக்கப்பட்ட மிரட்டல் என்பது ஒட்டுமொத்த ஊடகத்துறையினரின் குரல்வளையை இலங்கை அரசுடன் இணைந்து யாழ் வைத்தியசாலை நிர்வாகம் அடக்க முற்படுவதையே காட்டுகின்றது.*

*ஒரு ஊடகவியலாளருக்கே இந்த நிலை என்றால் சாதாரண மக்களின் நிலையை எண்ணி நாம் அச்சமடைந்துள்ளோம். இலங்கை அரசின் அடக்கு முறைகளுக்கும் யாழ் வைத்தியாலை நிர்வாகத்தின் அடக்குமுறைகளுக்கும் இடையில் எம்மால் அதிக வேறுபாடுகளை காணமுடியவில்லை.*

*இந்த முறைகேடுகள் மற்றும் அதிகார துஸ்பிரயோகங்கள் எமது மக்களின் சுகாதாரம் மற்றும் வாழ்க்கையை பாதிக்கும். எனவே யாழ் வைத்தியசாலை நிர்வாகம் தான் மேற்கொண்ட தவறுகளுக்கு சம்பந்தப்பட்ட ஊடகவியலாளரிடம் பகிரங்க மன்னிப்பு கோரவேண்டும் என்பதுடன், எதிர்வரும் காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.*

*இந்த அதிகார துஸ்பிரயோகத்தில் ஈடுபட்ட வைத்தியசாலை நிர்வாகம் தமது தவறுகளை ஒப்புக்கொண்டு உடனடியாக பதவி விலகுவதுடன், நேர்மையான வைத்தியர்கள் எமது மக்களுக்கான சேவையை பொறுப்பெடுக்கவும் அனுமதிக்க வேண்டும்.*

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

## சிறிலங்கா அரசாங்கத்தை மையப்படுத்தி ஈழத்தமிழர் இறைமையை மீளுறுதி செய்யவியலாது

ஈழத்தமிழர்களால் தங்கள் இறைமையைத் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளை அடைந்து கொள்ள இயலாமல் போவதற்கான தலைமைக் காரணியாக இருப்பது ஈழத்தமிழ் அரசியல்வாதிகளின் நடைமுறைகள் சிறிலங்கா அரசாங்கத்தை மையப்படுத்தியதாக அமைவது என்பது இலக்கின் எண்ணம். இதற்குச் சிறந்த உதாரணம் தற்போது நடைபெறவுள்ள சிறிலங்கா அரச தலைவர் தேர்தல். இந்தத் தேர்தல் ஈழத்தமிழருக்கு எந்தத் தீர்வையும் வழங்காது என்பது உலகறிந்த விடயம். அப்படியானால் ஈழத்தமிழர் இந்தத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது.

ஆனால் இதனை புறக்கணிப்பதா அல்லது பொதுவேட்பாளரை முன்னிறுத்தி இது ஈழத்தமிழர்களால் ஏற்கப்படாதவொன்று என்பதை வெளிப்படுத்துவதா? என்ற கருத்து மோதலையே இன்று காண்கின்றோம். இது சிறிலங்கா நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறைமை மூலம் செய்து வரும் ஈழத்தமிழரிடை ஒற்றுமையீனங்களை விரிவுபடுத்தி அவர்களின் இறைமையை ஒடுக்கும் அதன் தலைமை நோக்குக்கு ஈழத்தமிழர்களும் தங்களை அறியாமலே கருத்து மோதல்களால் துணைபோகின்றார்கள் என்பதே நடைமுறை எதார்த்தமாகவுள்ளது.

இந்நிலையை மாற்றுவதாக இருந்தால் முயற்சிகள் இரண்டுமே ஈழத்தமிழர்களுடைய இறைமைக்குச் சான்றாக அமையக் கூடியனவே என்பதை இருதரப்பினரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். பின்னர் இரு தரப்பினரும் மக்களுக்குத் தங்கள் நிலைப்பாடுகளின் நோக்கையும் போக்கையும் தெளிவுபடுத்தல் மூலம் மக்களுக்கு அரசியல் அறிவூட்டலைச் செய்ய வேண்டும். அந்த அரசியல் அறிவூட்டல் மக்களுக்கான வாழ்வுக்கான சத்தியாக மாற்றப்பட வேண்டும்.

இதற்கு புறக்கணிக்கும் மரபு ஈழத்தமிழர் இறைமைக்கான வெளிப்படுத்தல் என்று 22.05.1972 முதல் இன்று வரை ஈழத்தமிழர்கள் அரசற்ற தேசஇனமாக்கப்பட்டதன் பின்னர் தொடர்வதன் முக்கியத்துவத்தை ஏற்கவேண்டும். அதே வேளை புறக்கணிப்புக்கள் நடைபெற்ற போதிலும் அவை உலகின் கவனத்தை ஏன் கவரவில்லையென்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இனி தற்போது நடைபெறும் புறக்கணிப்பை எவ்வகையில் உலகின் கவனத்துக்குக் கொண்டு வரலாம் என்றும் மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். இந்தப் புறக்கணிப்பு எவ்வாறு சிங்கள தேசத்தையோ இந்தியக் கூட்டாண்மையையோ அல்லது அமெரிக்க சீன பங்காண்மைகளையோ ஈழத்தமிழர் தேசிய பிரச்சினைக்கான தீர்வுகள் குறித்துச் சிந்திக்க வைக்கும் என்பதை விளக்கித் தெளிவுபடுத்த வேண்டும். இதற்கு மாற்று வழியாக நோக்கில் மாறுபடாது ஈழத்தமிழர் வாக்குகள் சிங்களக் கட்சிகளுக்குப் போவதைத் தடுப்பதும் ஈழத்தமிழர்களின் அரசியல் குடிசார் செயற்பாட்டாளர்களை ஒன்றிணைந்து தேசமாக எழ வைப்பதும் பொதுவேட்பாளர் நியமித்தலின் நோக்கு என்றால் அதனை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். இது எவ்வகையில் ஈழத்தமிழர்கள் சிறிலங்காவின் இறைமையை ஏற்கவில்லையென்பதை வெளிப்படுத்தும் என்பதை மக்களுக்கு விளக்க வேண்டும். இது எந்த வகையில் உலகின் கவனத்தை ஈர்க்கும் இன்றைய உலகில் எதிலும் கூட்டாண்மைகளும் பங்காண்மைகளும் கொண்டே சமுக பொருளாதார அரசியல் ஆன்மிக விடுதலைகள் நோக்கிய பயணங்கள் நடைபெறும் நிலையில் ஈழத்தமிழர்கள் ஒற்றுமையாக எவ்வாறு பொதுவேட்பாளர் பின்னணியில் பொதுவெளியில் ஒரு இலக்கில் பல வழிகளில் முரண்பாடுகளைக் கடந்து ஒன்றுபட்டுக் கூட்டாண்மைகளுடனும் பங்காண்மைகளுடனும் பயணிக்கலாம் என்பதைத் தெளிவாக்கி மக்களை ஒருமைப்படுத்த வேண்டும். இதனையே இலக்கு பணிவாக வேண்டி நிற்கிறது. எங்களுக்குள் மோதல்கள் வேண்டவே வேண்டாம்.

யாராலும் இன்றைய உலகில் தனியொரு அமைப்பாகவோ அல்லது கட்சியாகவோ எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண இயலாது. இது உலகின் இன்றைய எதார்த்தம். ஈழத்தமிழர்களாகிய நாம் தாயகத்திலும் நாம் வாழும் அனைத்து நாடுகளிலும் ஒன்றிணைந்தால் எம்மையும் பாதுகாத்து உலகையும் பாதுகாத்து அமைதி வாழ்வைக் கட்டமைக்கும் மதியும் நிதியும் படைத்தவர்கள் எங்களால் இயலாததொன்றுமில்லை. சிறிய மக்கள் தொகையும் சிறிய நிலப்பரப்பும் கொண்ட சிங்கள மக்கள் எவ்வாறு தங்களை உலகிற்கு வேண்டியவர்களாகக் கட்டமைத்து தங்கள் நிலைப்பாடுகளையும் தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்கின்றார்கள் என்பது எமக்குக் கண்முன்பாகவே உள்ள உதாரணம்.

உள்ளது எதுவோ அதைக் கொண்டு வல்லது செய்தலும் வல்லது எதுவோ அதைக் கொண்டு நல்லது செய்தலும் மனித வளர்ச்சிக்கான படிகள் அதனை விட்டு நேற்றைப் பேசி மகிழ்வது அல்லது ஏங்குவது இனி வேண்டாம். நேற்றின் அனுபவங்கள் இன்று எமக்குப் பலமாகட்டும். நாளையை நினைந்து கனவு காணவும் வேண்டாம். இன்று என்ன பலத்தை வெளிப்படுத்துகின்றோமோ அதுவே நாளைய புதுமையை உருவாக்கும். இதுவே இலக்கின் அழைப்பு. தியாகங்கள் எப்பவும் போற்றப்பட வேண்டியது. நடைமுறைகள் எப்பவும் அந்தத் தியாகங்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட வேண்டியது. நேற்று நடந்தவை மாற்றப்பட முடியாத வரலாறு. இதனைச் சுமந்திரன் போன்ற சட்டத்தரணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒற்றையாட்சி சமஸ்டி எல்லாவற்றையும் கடந்து 1977ம் ஆண்டின் மக்களாணை என்றுமே இனியொரு சுதந்திரமான தேர்தல் இல்லாமல் மாற்றப்பட முடியாதது. தயவு செய்து உண்மையை நேர்மையை அரசியல் படுத்துங்கள். பொய்மைகள் வேண்டாம். திரிபுகளும் வேண்டாம். எந்தக் கெட்டிக்காரன் புளுகும் எட்டு நாட்களுக்குத் தான். உயிராலும் உடல் சிதைவுகளாலும் வாழ்விழப்புக்களாலும் பிறர் வாழத் தம்மை ஈகம் செய்த மரணமற்ற மனிதகுலத்தின் சொந்தக்காரர்கள் நாங்கள். அதன் பிரதிநிதிகளாக உங்களை முன்னிறுத்த முயலும் எவரிடமும் அந்தத் தியாகத்தை உறுதியையே யாரும் எதிர்பார்ப்பார்கள்.

இறுதியாக உலகம் இருபெரும் போர்முனைகளை எந்நேரமும் சந்திக்கும் நிலையிலுள்ளது. இன்றைய உலக அரசியல் ஒழுங்கு என்பது கொந்தளிக்கும் அலைகடலாக உள்ளது. இதன் விளைவுகள் மேற்குலகில் நிறவாதம் இனவாதம் உச்சத்தைத் தொடத் தொடங்கி விட்டதை பிரித்தானிய அதிதீவிர வலதுசாரிகள் நகரகாவலர் மோதல்களும் ஐரோப்பிய அதிதீவிர வலதுசாரிகள் வாக்குப்பலமும் தெளிவுபடுத்துகிறது. தாயகத்தில் இருந்து அரசியல் புகலிடம் கோரி புலம் பெயர்ந்த தமிழர்கள் மீளவும் அரசியல் புகலிடம் கோரி ஈழத்தமிழர் தாயகத்திற்கே திரும்பும் காலமும் கோலமும் வேகமாகிக் கொண்டு வருகிறது. இந்நிலையில் தாயக ஈழத்தமிழரும் புலத்து ஈழத்தமிழரும் கல்வியால் அறியாமையையும் சமுகமுதலீடுகளால் வறுமையையும் போக்கச் செய்ய வேண்டியவை எத்தனையோ உண்டு. அவற்றைச் செய்வதை விடுத்துச் சிறிலங்காவின் அரசியலில் மயங்குவதே ஈழத்தமிழர்கள் தங்கள் இறைமையை மீளுறுதி செய்வதில் உள்ள ஒரே தடையென்பதே இலக்கின் உறுதியான எண்ணம்.

**ஆசிரியர்**

# தமிழின விடிவிற்காக நீண்டகாலமாகப் பாடுபட்டுவந்த திரு.விராஜ் மெண்டிஸ் அவர்கள் காலமானார்



பிறப்பிலே சிங்கள இனத்தவராக இருப்பினும் தன் பரந்த மனத்தினால் மனிதர்களை மனிதர்களாக நேசித்து மனித உரிமைகளை மதித்து தமிழினத்தின் உரிமைக்காக தன் வாழ்வையே அர்ப் பணித்து நின்ற அதி உன்னத மனிதம் விராஜ் மெண்டிஸ் சாவை அணைத்த செய்தி இடியாக அதிர்ச்சி தருகிறது.

உயர்ந்த கல்வியலாளரான இவர் தன்னுடைய சொந்த வாழ்விலேயே ஒரு மனிதன் எப்படி நடத்தப்படக் கூடாதோ அப்படி சிறிலங்கா - பிரித்தானிய அரசு களாலும் துன்புறுத்தப்பட்டவர். சிறிலங்கா சிங்கள அரசினால் நாடற்றவராக்கப்பட்ட விராஜ் மெண்டிஸ் அவர்கள் பிரித்தானிய அரசினால் கொடூரமாக நடத்தப்பட்டு நாடு கடத்தப்பட்டார்.

தொடர்ந்து பிறீமனில் புகலிடத் தஞ்சம் பெற்று தொடர்ந்து தமிழினத்திற்காகவும் மனித உரிமைகளுக்காகவும் போராடி வந்த உன்னத மனிதம் விராஜ் மெண்டிஸ் அவர்கள் தமிழின இனப்படுகொலையை சர்வதேச அரங்கில் விசாரணைக்குட்படுத்த பல முன்னோடி செயற் பாடுகளில் தொடர் ந்து உழைத்து வந்தார்.

கடந்த காலங்களில் இனப்படுகொலை சர்வதேச விசாரணைக்கான ஆரம்பமாக அமைந்திருந்த மக்கள் தீர்ப்பாயங்களை உதாரணமாகக் கொண்டு தமிழின இனப்படு கொலைக்கான பிறீமன் மக்கள் தீர்ப்பாய அமர்வுகளை நடத்தித் தீர்ப்பளிக்க அச் சாணியாக இருந்து இயங்கியவர் உன்னத மனிதர் விராஜ் மெண்டிஸ் அவர்கள்.

சிங்களவர்கள் அத்தனை பேரையும் ஒரே தராசில் வைத்துப் பார்க்க முடியாது என்கின்ற ஒரு எண்ணம் மனதில் உதிக்கின்ற போது எல்லாம் தமிழினத்திற்காக வாழ்ந்து கொண்டிருந்த உன்னத மனிதம் விராஜ் மெண்டிஸ் அவர்களே எம் மனக் கண் முன் முதலில் தோன்றுவார்.

தமிழ்ழின விடுதலைப் போராட்டத் தினையும் அதன் உந்து சக்தியாக இயங் கிய த-மி-ழீ-ழ வி-டு-த-லை-ப் பு-லி-க-ளுடன் நல்ல ஆத் மார்த்தமான உறவைக் கொண்டிருந்த விராஜ் மெண்டிஸ் அவர் கள் மூத்த தளபதி கிட்டு அவர்கள் அனைத் துலகப் பணிகளில் இருந்த நாட்களில் அவருடன் சேர்ந்து இயங்கி ஒரு தமிழ னாகவே மாற்றம் பெற்றிருந்தார் என்பதை விடப் போராளியாகவே மாறியிருந்தார் என்பதே பொருத்தமானதாக இருக்கும்.

சாவு என்ற மனித வாழ்வின் முடிவு இந்த உன்னத மனிதத்தினை மௌனிக்க வைத்த போதும் அவரது கனவுகளை தொடர்ந்து செல்வோம் என்ற உறுதி மொழியுடன் நன்றிகளையும் விழியிலிருந்து சொரியும் நீரஞ்சலிகளையும் சமர்ப்பிப்போம். அவரது குடும்பத்தினருடைய துயரிலும் பங்கெடுத்து அஞ்சலிப்போம்.



# நான்கு முனைப் போட்டியும் தமிழ்ப் பொது வேட்பாளரும்

அகிலன்

ஜனாதிபதித் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதையடுத்து பரப்புரைகள் தீவிரமடைய விருக்கின்றது. வழமையாக இரு முனைப் போட்டியாக இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் இம்முறை மும்முனைப் போட்டியாக அமையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், நாமல் ராஜபக்ஷ களத்தில் இறங்கியமையும், ராஜபக்ஷ சகோதரர்கள் அனைவரும் அவருக்கு ஆதரவாக செயற்பட முன்வந்திருப்பதும், தேர்தல் களத்தை நான்கு முனைப் போட்டியாக மாற்றியுள்ளது.



அதேவேளையில், கடந்த கால ஜனாதிபதித் தேர்தல்களைவிட அதிகமான வேட்பாளர்கள் இம்முறை களமிறங்கியிருக்கின்றார்கள். அதாவது 39 வேட்பாளர்கள் களமிறங்கியிருக்கின்றார்கள். இதில் பெரும்பாலானவர்கள் சுயேச்சைகள். இந்த சுயேச்சைகளில் பலர் டம்மிகள். அதாவது பிரதான வேட்பாளர்களில் ஒருவரின் வாக்குகளைப் பிளவுபடுத்துவதற்காக மற்றொரு பிரதான வேட்பாளரால் களமிறக்கப்பட்டவர்கள். வெல்வது அல்ல. குறிப்பிட்ட ஒருவரின் வாக்குகளைப் பிளவுபடுத்துவதே அவர்களின் பணி!

அண்மைய கருத்துக் கணிப்புக்களின் படி, இரண்டு பிரதான வேட்பாளர்களான ரணிலுக்கும், சஜித்துக்கும் இடையில்தான் கடுமையான போட்டி உள்ளது. அடுத்தவர்களாக அநுரகுமார திசாநாயக்கவும், நாமல் ராஜபக்ஷவும் உள்ளார்கள். அதேவேளையில், எந்தவொரு வேட்பாளரும் 50 வீதமான வாக்குகளைப் பெறமுடியாத நிலை காணப்படுகின்றது. 40 வீதமான வாக்குகளை அண்மித்ததாகத்தான் பிரதான வேட்பாளர்கள் பெறுவார்கள் என்பதுதான் மதிப்பீடாக உள்ளது.



இலங்கைத் தேர்தல் சட்டத்தின்படி, ஜனாதிபதித்தேர்தலில்ஒருவர்வெற்றிபெறுவதற்கு 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற வேண்டும். அவ்வாறில்லை என்றால், மூன்றாவதாக வருபவரின் இரண்டாவது விருப்பு வாக்கு கணிப்பிடப்படும். இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாவது விருப்பு வாக்கு எண்ணப்படும் ஒரு நிலை ஏற்படலாம். தேர்தல் களத்தில் பிரதான வேட்பாளர்கள் நூறுக்கும் அதிகமான பரப்புரைக் கூட்டங்களை சுமார் 35 நாட்களில் நடத்துவதற்குத் திட்டமிடுகின்றார்கள்.

களம் நான்கு முனைப் போட்டியாக மாறியிருப்பதால், தமிழ் மக்களுடைய வாக்குகளின் பெறுமதி அதிகரித்திருக்கின்றது. அதாவது, தீர்மானிக்கும் சக்தியாக தமிழ் வாக்குகள் அமையப்போகின்றது. ஏதோ ஒரு வகையில் தமிழ் வாக்குகள் தமக்குக் கிடைப்பதற்கு வழி வகுத்தால் தமது வெற்றியை ஓரளவுக்காவது உறுதிப்படுத்தலாம் என்று ரணிலும், சஜித்தும் திட்டமிட்டுச் செயற்படுகின்றார்கள். ஆனால், தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம்தான் அவர்களுக்கு இப்போது வந்திருக்கும் சவால்!



"தமிழ்ப்பொது வேட்பாளர்" என்ற விடயம் ஆண்டிகள் கூடி மடம் கட்டுவது போல முடிவுக்கு வரும் என்றுதான் பலரும் எதிர்பார்த்தார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட, முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை சந்தித்த போதுகூட, "தமிழ்க் கட்சிகள் இணைந்து பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவது சாத்தியமாக இருக்குமா," என்ற கேள்வியை எழுப்பியிருந்தார். கடந்த காலங்களைப் போல, வெறும் கதையாக இது முடிந்துவிடும் என்றுதான் சிங்களத் தலைவர்கள் கூட எதிர்பார்த்தார்கள்.



பொது வேட்பாளராக பா.அரியநேத்திரன் போட்டியிடுவார் என்று தமிழ்ப் பொதுச் சபையால் கடந்த வாரம் வெளியிடப்பட்ட அறிவிப்பு, ரணிலுக்கும் சஜித்துக்கும் நிச்சயமாக அதிர்ச்சியைக் கொடுத்திருந்தது. உடனடியாகவே பேச்சுவார்த்தைக்கு வருமாறு தமிழ்ப் பொதுச் சபையின் 14 பிரதிநிதிகளுக்கும் இருவருமே அழைப்பு விடுத்தார்கள். பொது வேட் பாளர் களமிறங்குவது தமிழ் மக்களுடைய வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கு தாம் வகுத்திருந்த உபாயங்களை சீர்குலைத்துவிடும் என்பதுதான் அவர்களுடைய அச்சம். அந்த அச்சம் நியாயமானது தான்.

பொது வேட்பாளரைத் தெரிவு செய்து களமிறக்கிய தமிழ்ப் பொதுச் சபையில் ஏழு தமிழ்த் தேசியக் கட்சிகளும், 80 வரையிலான சிவில் சமூக அமைப்புக்களும் உள்ளன. இதனைவிட, பிரதான தமிழ்க் கட்சியான தமிழரசுக் கட்சி, இதுவரையில் தீர்மானம் எதனையும் எடுக்காத போதிலும் அதிலுள்ள பெரும்பாலானவர்கள் பொது வேட்பாளர் என்ற கருத்தை ஆதரிக்கின்றார்கள். கிளிநொச்சியில் கடந்த வாரம் இடம்பெற்ற பொது வேட்பாளருக்கு ஆதரவான கூட்டம் ஒன்றில் 400 க்கும் அதிகமானவர்கள் கலந்துகொண்டிருந்தார்கள். இவர்கள் சிறீதரனின் ஆதரவாளர்கள். ஆக, பொது வேட்பாளருடன் நிற்காவிட்டால், வரப்போகும் பொதுத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் அது தம்மைப் பாதிக்கும் என்ற அச்சம் தமிழரசுக் கட்சிக்காரர்களிடம் உள்ளது.

இந்த நிலையில் பொது வேட்பாளரை களமிறக்கியவர்களுடன் பேசி அவர்களை வழிக்குக் கொண்டுவர முடியுமா, என்பதைப் பார்ப்பதுதான் ரணிலினதும், சஜித்தினதும் திட்டமாக இருந் தது. அநுரவைப் பொறுத்தவரையில் அவர் தமிழர்களுக்கு வாக்குக் கொடுப்பது, தனக்கு இருக்கும் சிங்கள வாக்குளை பாதிக்கும் என்று அஞ்சுகின்றார். அதனால், பொது வேட்பாளர் விடயத்தை கடுமையாகத் தாக்குவதற்கு அவர்களுடைய யாழ். மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரனுக்கு அனுமதி கொடுத்துவிட்டு அநுர குமார மௌனமாக இருக்கின்றார்.

தமிழ்ப் பொதுச் சபையில் உள்ள அசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மட்டும்தான் ஜனாதிபதியையும், எதிர்க்கட்சித் தலைவரையும் சந்தித்தார்கள். சிவில் சமூகப் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை. சந்திப்புக்கான நிகழ்ச்சி நிரல் தரப்படாமையாலும், போதிய கால அவகாசம் இருக்காமையாலும் இந்தப் பேச்சுக்களில் தாம் பங்கேற்கவில்லை என்று சிவில் சமூகப் பிரதிநிதிகள் தெரிவித்திருந்தார்கள். நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் இவ்வாறான சந்திப்பு ஒன்றுக்கு தாம் தயாராக இருப்பதாகவும் அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

ரெலோ, புளொட், ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பனதான் இந்தப் பேச்சுக்களில் பங்கேற்றன. பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதற்கு தாம் எடுத்த தீர்மானத்துக்கான காரணம் என்ன என்பதை இதன்போது இருவருக்குமே அவர்கள் விளக்கினார்கள். இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டிதான் தமது கோரிக்கை என்பதையும் அவர்கள் வலியுறுத்தினார்கள். ஜனாதிபதி வேட்பாளர்களால் வழங்கப்படும் வாக்குறுதிகள் எதுவுமே கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட விரக்தியையும் அவர்கள் விளக்கினார்கள்.



சமஷ்டியைத் தருவது என்பது பிரச்சினையல்ல என்று தெரிவித்த ரணில், பலமான ஒரு நாடாளுமன்றம் அமைந்தால் அதனைத் தரதான் தயாராக இருப்பதாகக் கூறியிருக்கின்றார். ஆனால், பிரதான கட்சிகள் அனைத்துமே உடைந்து சின்னாபின்னமாகிப் போயிருப்பதால், எதிர்காலத்தில் பலமான நாடாளுமன்றம் ஒன்று உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. இரண்டரைவருடகாலமாகநிறைவேற்றுஅதிகாரங்களுடன் ஜனாதிபதியாக இருப்பவர் மீண்டும்,

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# தேர்தல் நெருங்கும் போது தமிழரசும் வழிக்கு வரும்!



ஜனாதிபதி தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயமும் இன்று பேசுபொருளாகியிருக்கின்றது. பொது வேட்பாளர் யார் என்பது அறிவிக்கப்பட்டவுடன் ரணிலும், சஜித்தும் பொதுக் கட்டமைப்பை பேச்சுக்கு அழைத்தார்கள். இந்தப் பின்னணியில் இவை தொடர்பாக இந்த வாரம் தனது கருத்துக்களை முன்வைக்கின்றார் சமூக, அரசியல் செயற்பாட்டாளர் **செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை** அவர்கள் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் **YouTube** இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள **QR Code** இனை ஸ்கான் **(Scan)** செய்யவும்.

**தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் பல மாதங்களாகப் பேசப்பட்டு இப்போது அது சாத்தியமாகியிருக்கின்றது. பா.அரியநேத்திரன் பொது வேட்பாளராகக் களமிறக்கப்பட்டுள்ளார். இந்தத் தெரிவு குறித்த உங்கள் பார்வை என்ன?**

இது மிகவும் பொருத்தமான தெரிவு என்பது தான் என்னுடைய கருத்து. கிழக்கு மாகாணத்தில் இருந்து ஒரு பிரதிநிதியை இதற்காகத் தெரிவு செய்ய வேண்டும் என்பதில் ஆரம்பத்திலிருந்தே நாம் தீர்க்கமாக இருந்தோம். பெண் ஒருவரை வேட்பாளராக நிறுத்துவதற்கு விரும்பினோம். ஆனால், அது சாத்தியமாகவில்லை.

இரண்டாவதாக தேர்தல் விதிகளையிட்டும் நாம் கவனம் செலுத்த வேண்டியிருந்தது. இலங்கைத் தேர்தல் சட்டத்தின்படி ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது முன்னாள் உறுப்பினர்தான் சுயேச்சையாகப் போட்டியிட முடியும். இல்லையெனில் அவர் கட்சி சாராமல் மட்டுமே போட்டியிட முடியும். கட்சிகள் தமது சின்னத்தை எமக்குத் தந்தால் அந்த சின்னத்தை மீண்டும் அவர்கள் பயன்படுத்தக்கூடாது என்று நாங்கள் சொல்லியிருந்தோம். அது கட்சிகளுக்கு ஒரு சங்கடமான நிலையை ஏற்படுத்தியிருந்தது.

ஆனால், முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் தமது கட்சிகளை இதற்குப் பயன்படுத்த அனுமதி தருவதாக உறுதியளித்திருந்தார்கள். ஆனால், கட்சி சாராமல் சுயேச்சையாக ஒருவரை நிறுத்துவதற்கு நாம் தீர்மானித்தோம். குறிப்பிட்ட கட்சிக்கு எதிராக இருக்கக்கூடிய வாக்காளர்கள் வெளியேறுவதை தவிர்ப்பதற்கு அது அவசியமாக இருந்தது.

அந்தவகையில்தான் அரியநேத்திரனைத் தெரிவு செய்தோம். அவர் தமிழ்த் தேசியத்துடன் நீண்டகாலமாக நின்றவர். அந்த வகையில் அவரது தெரிவு பொருத்தமான ஒன்றாகத்தான் இருக்கின்றது.

**பொது வேட்பாளருக்கான நிகழ்ச்சி நிரல் என்ன? அவரது தேர்தல் விஞ்ஞாபனம் போன்றன தயாரிக்கப்பட்டுள்ளதா?**

உண்மையில், இந்த தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது மட்டும் எமது நோக்கம் அல்ல. உண்மையில் தமிழர்களை ஒருங்கிணைத்து தேசக் கட்டுமாணத்தை முன்னெடுப்பதுதான் எமது நோக்கம். இதற்காகப் பணிபுரிந்துகொண்டிருந்த தமிழ் சிவில் சமூகத்தினர், இந்தத் தேர்தலைப் பயன்படுத்தி அதனை ஏன் வேகப்படுத்த முடியாது, என்ற கேள்வியை எழுப்பிய போதுதான் இந்த விவகாரம் முன்னிலைப்படுத்தப்பட்டது. அதாவது, பொது வேட்பாளர் ஒருவரை முன்னிலைப்படுத்துவதன் மூலம் மக்களின் திரட்சியை விரைவுபடுத்துவதுதான் இங்கு முதன்மையானதாக இருக்கின்றது. அதுதான் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இது செப்ரெம்பர் 21 உடன் முடிவுக்கு வந்துவிடும். ஏனெனில் இவர் பதவியைப் பெற்றுக்கொள்ளப்போவதில்லை. ஒரு தேசமாக மக்களைக் கட்டமைப்பதற்கான பணியை அதன் பின்னர் நாம் தொடர்ந்தும் முன்னெடுப்போம்.

தேர்தல்களின் போது மரபு ரீதியாக ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்றைக் கொண்டுவருவார். அந்த விஞ்ஞானங்கள் வாக்குறுதிகள் நிரம்பியதாக இருக்கும். இங்கு அவ்வாறான வாக்குறுதிகள் எதுவும் இருக்காது. இங்கு ஒரு விடயம்தான் இருக்கும். பொது வேட்பாளராக நாம் ஏன் வருகின்றோம் என்பது அங்கு சொல்லப்படும். ஏன் இவருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதற்கான கோட்பாட்டை பற்றி மட்டும்தான் சொல்லப்போகின்றோம்.

தேசமாக அணிதிரளல், தேசமாக எம்மைக் கட்டமைத்தல், பலங்கொண்ட தேசிய இனங்களில் ஒன்றாக இலங்கையில் எங்களை நிலை நிறுத்துவதன் மூலம் எங்களுடைய பேரம்பேசும் சக்தியையும் ஆளுகையையும் நிலைநிறுத்தி, நிரந்தமான ஒரு அரசியல் தீர்வுக்கான வழியை ஏற்படுத்துதல். இதுதான் விஞ்ஞாபனத்தில் இடம்பெறும். அதனைவிட வழமையான மரபுரீதியான விஞ்ஞாபனமாக எமது விஞ்ஞாபனம் அமையாது.

**தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில், மக்கள் மத்தியில் சென்று உங்களுடைய பரப்புரைகளை முன்னெடுப்பதற்கு எவ்வாறான உபாயங்களை நீங்கள் வகுத்துள்ளீர்கள்?**

நவீன தொடர்பு சாதனங்களும் வளர்ந்திருக்கும் நிலையில் நாம் இரண்டு, மூன்று வகையான உபாயங்களைக் கையாளப்போகின்றோம். சமூக ஊடகங்களை அதிகளவுக்குப் பயன்படுத்துவதன் மூலம், பரப்புரைகளை முன்னெடுக்கவுள்ளோம். அதேவேளையில், பரப்புரைக் கூட்டங்களை ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம். மூன்றாவதாக, குறிப்பிட்ட தொகுதியினரைத் தெரிவு செய்து அவர்களுடன் பேசுவது. குறிப்பாக, இளைஞர்கள், பெண்கள், மீனவர்கள், விவசாயிகள் என்று வகைப்படுத்தி அவர்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுப்பது. ஏற்கனவே அவ்வாறான கலந்துரையாடல்களை நடத்தியுள்ளோம். தொடர்ந்தும் அதனை முன்னெடுப்போம்.

இதன் நோக்கம் வெறுமனே பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி அவருக்கு வாக்கு சேகரிப்பதல்ல. ஒரு பரந்துபட்ட கலந்துரையாடலை அனைத்துத் தரப்பினருடனும் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

**பொது வேட்பாளர் தெரிவு போன்ற விடயங்களுக்காக வடக்கு, கிழக்கின் பல பகுதிகளுக்கும் சென்று வந்திருக்கின்றீர்கள். இந்த பொது வேட்பாளர் என்ற கருத்து இளைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் எந்தளவுக்கு ஆதரவைப் பெற்றிருக்கின்றது?**

இலங்கையின் அரசியல் கலாசாரம் சீரழிந்து போயுள்ளது. பாரம்பரிய ரீதியான கட்சிகள் தலைமைகள் என்பன சீர்குலைந்துள்ள ஒரு நிலையைத்தான் தென்பகுதியில் காணமுடிகின்றது. தமிழர்களைப் பொறுத்தவரையிலும் அவ்வாறான ஒரு நிலைதான் இருக்கின்றது. தலைமையில் இருப்பவர்கள் தமது இஷ்டப்படி பேச்சுக்களை நடத்துகின்றார்கள். இந்த நிலை மாற்றப்பட வேண்டும். இந்த விடயங்களை மக்களுடன் பேசித்தான் செய்ய வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். இவ்விடயத்தை இளைஞர்களுக்கு உணர்த்தி அவர்களை இவ்விடயத்தில் முக்கிய பொறுப்புக்களை ஏற்கச்செய்ய வேண்டும்.

இது இளைய தலைமுறையினரின் காலம். கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக அரகலய இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்டது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அண்மையில் பங்களாதேஷில் மாணவர்களால் ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. இங்கும் இளைஞர்களுக்கு நாம் உள்ள நிலைமைகளை வெளிப்படையாகச் சொல்ல வேண்டும். பல இளைஞர் குழுக்கள், பெண்கள் அமைப்புக்களுடன் நான் கடந்த காலங்களில் கலந்துரையாடல்களை நடத்தியிருக்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# ஜனாதிபதித் தேர்தல்:

## தமிழ் மற்றும் முஸ்லீம் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்த அரசு மீண்டும் முயல்கிறதா?

மட்டு.நகரான்

இலங்கையில் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையினைப்பொறுத்த வரையில் என்றைக்கும் ஒரு ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்ட தலைவர்கள் இல்லாத தலைவர்கள் இல்லாத காரணத்தினால் தொடர்ச்சியாக தேர்தல்கள் மோசடிகள் நிறைந்ததாகவும் இனங்களிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் தொடர்ச்சியாக இருந்துவருகின்றது.

குறிப்பாக ஒவ்வொரு தேர்தல் காலங்களிலும் சிறுபான்மை மக்களிடையேயும் சிறுபான்மை மக்களுக்கும் பெரும்பான்மை மக்களுக்கும் இடையேயும் குழப்பங்களை ஏற்படுத்தி தமது அரசியல் காய்களை நகர்த்தும் தென்னிலங்கை சிங்கள பேரினவாத சக்திகளின் செயற்பாடுகள் என்பது தற்போதும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

யுத்த காலத்தில் தமிழ் மக்களை பயங்கரவாதிகளாக காட்டி தெற்கில் இனவாதத்தினை விதைத்து தமது அரசியலை முன்னெடுத்தவர்கள் இன்று முஸ்லீம்களை பயங்கரவாதிகளாக காட்டியும் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே பிரச்சினைகளை ஏற்படுத்தியும் தமது சிங்கள கடும்போக்குவாத அரசாங்கத்தினை அமைப்பதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதை காணமுடிகின்றது.



குறிப்பாக கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் நடாத்தப்பட்டு கோத்தபாய ராஜபசாவை ஆட்சிக்கு கொண்டு வந்ததது போன்று கிழக்கில் மீண்டும் ஒரு இனக்கலவரம் அல்லது குண்டுத்தாக்குதல் ஒன்றை மேற்கொள்வதற்கான முஸ்தீபுகள் முன்னெடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் இன்று பரவலாக ஏற்பட்டுவருகின்றது.

குறிப்பாக கிழக்கில் யுத்த காலத்தில் முஸ்லிம் ஆயுதக்குழுக்களை பயன்படுத்தி தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியான படுகொலைகளை நடாத்தியும் தமிழ் ஆயுதக்குழுக்களை பயன்படுத்தி முஸ்லிம் மக்கள் மீது தாக்குதல்களை நடாத்தி தமிழ்-முஸ்லிம் மக்களிடையே உறவுகளில் விரிசல்களை ஏற்படுத்தி அதன்மூலம் சிங்கள பேரினவாதம் தமது அரசியல் தேவைகளை நிறைவேற்றி வந்தது. ஆனாலும் யுத்தம் நிறைவடைந்த காலத்தில் அவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கமுடியாத நிலையில் குண்டுத் தாக்குதல்களை நடாத்தி அதனை முஸ்லிம் சமூகம் மீது சுமத்தி சிங்கள பௌத்த கடும்போக்காளர்களின் வாக்குகளை பெறுவதற்கு தொடர்ச்சியான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

1990ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடக்கம் டிசம்பவர் மாதம் வரையில் அதிகளவான தமிழின படுகொலைகள் நடந்த காலப்பகுதியாகும். கூடுதலாக இக்காலப் பகுதியிலேயே சிறுபான்மை சமூகம் மீது வேட்டைகள் நடத்தப்பட்டு வந்தன. ஜூலை படுகொலை தொடக்கம் இந்த நாட்டில் சிறுபான்மை சமூகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் எண்ணிலடங்காத படுகொலைகள் நடைபெற்றுள்ளன.இந்த படுகொலைகளை வைத்தே தெற்கில் சிறுபான்மை மக்களுக்கு எதிரான அரசியல் முன்னெடுக்கப்பட்டதுடன் -முஸ்லீம் மக்கள் மத்தியிலும் பெரும்பான்மை கடும்போக்கு அரசுகள் வேரூரன்ற காரணமாக அமைந்தன.



கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் இன்றைய காலத்தில் தெற்கில் முன்னெடுக்கப்படும் எந்த தேர்தலுக்கும் பலிகடாவாக்கப்படும் மாகாணமாக காணப்படுகின்றது. வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகம் என்பதை மழுங்கடிப்பதற்காக தெற்கில் பேரினவாத சக்திகளினால் கிழக்கில் காலத்திற்கு காலம் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டே வருகின்றன.இது தொடர்பில் கடந்த காலத்தில் பல தடவைகள் இது குறித்து நான் எழுதியிருக்கின்றேன். அவ்வாறானதொரு நிலைமையினை ஏற்படுத்துவதற்கான பல்வேறு முயற்சிகள் கிழக்கில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவருவதை காணமுடிகின்றது.



குறிப்பாக ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் போன்றதொரு சம்பவம் அல்லது தமிழ் -முஸ்லீம் கலவரம் போன்ற விடயங்களை ஏற்படுத்தி தமது அரசியல் இருப்பினை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பேரினவாத சக்திகள் முன்னெடுத்துவருகின்ற நிலையில் அதற்கு துரப்பு சீட்டாக மட்டக்களப்பில் ஆளும் கட்சியை சேர்ந்தவர்களும் முன்னாள் ஆயுதக் குழுவான பிள்ளையான் குழுவும் பயன்படுத்தப்படுகின்றதான தகவல்களும் வெளியாகி வருகின்றது.

அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், கிழக்கில் பிள்ளையான் முன்னெடுக்கும் செயற்பாடுகள், ஆயுதங்களின் பரிமாற்றம் மற்றும் குண்டுத்தாக்குதல் நடாத்துவதற்கான ஆயத்தங்கள் மற்றும் ஆயுதங்கள் பரிமாற் றங்கள் குறித்தும் இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் போன்ற கருத்துகளை வெளிப் படுத்தியிருந்தார். இது தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை யினையும் முன்வைத்திருந்தார். ஆனால் இது வரையில் எந்த விசாரணையும் நடை பெற்றதாக நான் அறியவில்லை.

இதேபோன்று மட்டக்களப்பு கரடியனாறு காவல்துறைப் பிரிவுக்குட்பட்ட பகுதியிலிருந்து பெருமளவான வெடிபொருட்கள் மீட்கப்பட்டிருந்தன. இதுவரையில் மீட்கப்படாத வகையில் அதிகளவான வெடிபொருட்கள் இங்கு மீட்கப்பட்டிருந்தன.

சம நேரத்தில் காத்தான்குடி-மட்டக்களப்பு எல்லைப்பகுதியான பூநொச்சிமுனை பகுதியில் உள்ள வீடு ஒன்றின்மீது குண்டுத்தாக்குதல் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.



உள்ளூர்தயாரிப்பு குண்டு ஒன்றே இவ்வாறு தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதல் வேறு நபரால் நடாத்தப்பட்டதா அல்லது குறித்த வீட்டில் பரிசோதனையின்போது வெடிக்கப்பட்டதா என்பது தொடர்பிலான விசாரணைகள் இன்னும் முடியவில்லை. இவ்வாறான நிலையில் மட்டக்களப்பு ஓட்டமாவடி பகுதியில் இரண்டு ரி.56துப்பாக்கியுடன் இஸ்லாமிய மௌலவி ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்படுகின்றார்.

இவ்வாறான செயற்பாடுகளே எதிர்காலத்தில் கிழக்கிலோ அல்லது நாட்டின் வேறு பகுதிகளிலோ தாக்குதல்களை முன்னெடுப்பதற்கான முன்னோட்டமாக பார்க்கப்படுகின்றது. கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களின் அடிப்படையில் பார்க்கும்போது குண்டுத்தாக்குதல் நடாத்துவது அல்லது இனக்கலவரங்களை நடாத்துவது போன்ற வகையான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இதற்காக பிள்ளையான் குழுவினை பயன்படுத்தும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதனை காணமுடிகின்றது.

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

# குடியிருப்பு காணிகளை அபகரிக்க வேண்டாம் எனக் கோரி
# கப்பல் துறை பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம்

வடகிழக்கில் தொடர் போராட்டங்கள் மூலமாக சிறுபான்மை சமூகம் அடிமைகளாக மாறிவிடும் அளவுக்கு வந்து விட்டார்கள் .விவசாய நில அபகரிப்பு போன்ற பிரச்சினைகள் அண்மைக்காலமாக திருகோணமலை மாவட்டத்தில் உள்ள முத்து நகர், கப்பல் துறை போன்ற பகுதிகளில் இடம் பெற்று வருகின்றன.



பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கப்பல் துறை பகுதியில் உள்ள மக்கள் தங்கள் விவசாய காணிகளை அபகரிக்க வேண்டாம் என கோரி அண்மையில் (10.08.2024) கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த கவனயீர்ப்பில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டதுடன் அல்அக்சா ஜூம் ஆ பள்ளிவாசலுக்கு முன்னால் இருந்து அஷ்ரப் நகர் வயல் வீதி வரை பேரணியாக சென்றனர். "வேண்டாம் வேண்டாம் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் வேண்டாம், எங்களுடைய விவசாய காணிகள் எங்களுக்கு வேண்டும், போன்ற வாசகங்களை ஏந்தியவாறும் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.இலங்கை துறைமுக அதிகார சபையினர் தங்கள் பகுதிக்குள் வந்து விவசாயம் செய்ய விடாது தடுத்து நிறுத்துவதுடன் எல்லாக் கட்டடங்களையும் குடியிருப்புகளையும் அகற்றுமாறும் வற்புறுத்துவதாக தெரிவிக்கின்றனர் என ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். குறித்த கப்பல் துறை கிராமத்தில் சுமார் 1200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் அன்றாட ஜீவனோ பாயமாக மீன் பிடி, விவசாயத்தை கொண்டு வாழ்ந்து வருகின்றனர். சுமார் 150 ஏக்கர் அளவில் விவசாய காணிகள் காணப்படுகின்றன இவ்வாறு 1977ல் மீள் குடியேறிய மக்கள் தற்போது அவர் களை வெளியேறுமாறு துறைமுக அதிகார



சபையினர் கூறி வருகின்றனர். அப்போதைய கப்பல் துறை ,துறை முகங்கள் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சராக செயற்பட்ட மறைந்த எம்.எச். எம்.அஷ்ரப் அவர்களால் மக்கள் மீள் குடியேற்றப் பட்டார்கள் என்பதுடன் குறித்த அமைச்சரால் 1995 பங்குனி மாதம் 04ம் திகதி குறித்த கிராமத்தில் உப தபால் கந்தோர்,வாசிகசாலை, கிராம அதிகாரி ,சனசமூக நிலைய கட்டிடத் தொகுதியும் திறந்து வைக்கப்பட்டு தற்போது வரை இயங்கி வருவதுடன் மக்கள் சேவையும் இடம் பெற்று வருகிறது. நாங்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வாழ்ந்து வருகிறோம் துறை முக அதிகார சபையினர் எங்களை வெளியேறுமாறு அடிக்கடி தொல்லை செய்கின்றனர் எங்களை நிம்மதியாக வாழ விடுங்கள் எனவும் கவனயீர்ப்பில் ஈடுபட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே இப் பிரதேச மக்களின் காணிகளுக்கான உறுதிப் பத்திரங்களை வழங்கி வாழ வைக்குமாறும் இதன் போது கோரிக்கை விடுத்தனர்.



இது தவிர 2024.08.16 அன்று முத்து நகர் பகுதி மக்களும் கவனயீர்ப்பில் காணி அபகரிப்புக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

திருகோணமலை மாவட்டத்தில் கப்பல் துறை, முத்து நகர் போன்ற பகுதியில் மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்ந்து வருகின்றனர். இக் காணிகள் இலங்கை துறை முக அதிகார சபைக்கு சொந்தமானது என அதனை வெளி நாடுகளுக்கு தாரைவார்க்க வேண்டாம் என மக்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது இருந்த போதிலும் குறித்த பகுதிக்குள் மக்கள் கவனயீர்ப்பு போராட்டங்களை முன்னெடுக்க முடியாது என திருகோணமலை நீதிமன்ற நீதவானால் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என சீனக்குடா பொலிஸார் நால்வர் அடங்கிய பெயரை குறித்து தடை உத்தரவை வழங்கியுள்ளதாக குறித்த கவனயீர்ப்பில் ஈடுபட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் ராசிக் றியாஸ்தீன் தெரிவித்தார்.



குறித்த முத்து நகர் மற்றும் கப்பல் துறை பகுதிகளில் மக்கள் 1972ம் ஆண்டு அப்போதைய பிரதமராக செயற்பட்ட ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்களால் குடியேற்றம் செய்யப்பட்டிருந்தது.

விவசாயத்தை நம்பி வாழும் மக்களை தற்போது மீள எழுப்பி இந்தியாவுக்கு மின்சார காற்றாலை உற்பத்திக்கு நீண்ட கால குத்தகைக்கு வழங்குவது மக்களை நசுக்கும் செயலாகும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மாவட்ட அமைப்பாளர் மேலும் தெரிவித்தார்.



மக்களுடைய விவசாய காணிகளை இலங்கை துறை முக அதிகார சபை அபகரித்து

**ஹஸ்பர் ஏ. ஹலீம்**

அந்நிய நாடுகளுக்கு நீண்ட கால குத்தகைக்கு விட முற்படுவதால் மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.



"நிரந்தரமாக விவசாயம் செய்ய விட வேண்டும் அரசாங்கம் எங்கள் வாக்குறுதிகளை நம்ப வேண்டும் துறை முக அமைச்சராக இருந்த மறைந்த அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களே எங்களை 1995ம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்து விட்டு உங்களை யாரும் தொந்தரவு செய்ய மாட்டார்கள் நிம்மதியாக விவசாயம் செய்து வாழலாம் என கூறினார்கள் ஆனால் தற்போது எங்களை வெளியேறுமாறு துறை முக அதிகார சபையினர் அச்சுறுத்துகின்றனர்" என கப்பல் துறை பகுதி கிராம அபிவிருத்தி சங்க தலைவர் தெரிவித்தார்.

1972களில் மக்கள் இப் பகுதியில் வாழ்ந்து வந்த நிலையில் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து அகதிகளாக்கப்பட்ட நிலையில் குறித்த பகுதியை விட்டு வெளியேறி மீண்டும் 1995 களில் மீள்குடியேற்றப்பட்டார்கள். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுமய திட்டத்தின் கீழ் காணி அளிப்பு பத்திரங்களை தேசிய ரீதியில் வழங்கிய போதிலும் இம் மக்களுக்கு வழங்கவில்லை .ஜனாதிபதி தேர்தல் நெருங்கியுள்ள நிலையில் ஜனாதிபதி வேட்பாளர்களின் கவனத்தை இம் மக்களின் ஈர்க்குமா? என அப் பகுதி விவசாயிகள் அங்கலாய்க்கின்றனர்.



இது தொடர்பில் 13.08.2024 அன்று கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் தம்பலகாமம் பாலம்போட்டாறு விஜயத்தின் போது இவ் விடயம் தொடர்பில் வினவிய போது இதனை தீர்த்து வைப்பதாக தெரிவித்தார்.

"2017ம் ஆண்டு காணி அபகரிப்பு தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதி மீண்டும் பதில் கிடைக்கப்பெற்றது அதன் பிறகு தொல்லை இல்லை தற்போது இலங்கை துறை முக அதிகார சபையினர் கட்டிடங்கள் அமைக்கவோ விவசாய செய்கை செய்யவோ விடாது அடாத்தாக உள் நுழைந்து தடுக்கின்றனர் நாங்கள் இதை யாரிடம் சொல்வது " என அப் பகுதி குடும்பப் பெண் தெரிவித்தார்.

சிறுபான்மை அரசியல் பிரதிநிதிகள் இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் பேசி தீர்க்கமான முடிவுகளை பெற்றுத்தர வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

• • •

# தமிழ்ப்பொது வேட்பாளர் தொடர்பில் வடக்கு கிழக்கு மற்றும் மலையக மக்களுக்கு புலம் பெயர் அமைப்புக்கள் தெளிவு படுத்த வேண்டும்:

## பா.அரியநேத்திரன் கோரிக்கை

**இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் இணைந்து, தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனை தமிழ் மக்களுக்கான பொது வேட்பாளராக அறிவித்துள்ளன.**

**இலங்கையில் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களுக்கான பொது வேட்பாளராக ஒருவர் களமிறக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.**

**இந்த நிலையில், பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன், 'இலக்கு' ஊடகத்திற்கு வழங்கிய செவ்வி**



### நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் அரச தலைவர் தேர்தலில் ஏன் சிங்களவர்களை ஆதரிக்கின்றனர்?

வடக்கு கிழக்கை பொறுத்தமட்டில் தமிழ் தேசிய கட்சிகள் பல இருக்கிறன. கட்சிகளுக்கு அப்பால் இதில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதியாக வரக்கூடியவர்கள் சில வாக்குறுதிகளை வழங்குகின்றனர், அந்த வாக்குறுதிகள் நிமித்தமாக சில அபிவிருத்திகளை அந்த பிரதேசத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு வழங்குகின்றபோது அதற்காக அவர்கள் சில பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதென்பது, அவர்களை தமிழ்த்தேசியத்தில் இருந்து விடுபட்டவர்களாகப்பார்க்க முடியாது. தமிழ் தேசியம் என வருகின்ற போது அவர்கள் கொள்கையில் உறுதியாக உள்ளனர். ஆனால் சில அபிவிருத்திகளுக்காக அவர்களுடன் இணைந்து செயற்படுகின்றனர். அதைப்பார்க்கும் போது அவர்கள் தமிழ்த்தேசியத்தில் இருந்து விலகுவதாக தெரியும். ஆனால் அது அப்படியல்ல. மேலும் அவர்கள் பொது வேட்பாளர் என்ற கொள்கையையும் அவர்கள் ஆதரிப்பார்கள் என்று நினைக்கின்றேன். ஏனென்றால் இந்த பொதுக்கட்டமைப்புடன் சேர்ந்து பயணித்தவர்கள் தமிழ்த்தேசிய கட்சிகளாக இருக்கின்றவர்களும் இருக்கின்றார்கள். அவ்வாறனவர்கள் அதைவிட்டு விலகிச் செல்கின்ற போது மக்கள் அவர்களை வேறுவிதமாக இனம் காண்பார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியும்.



எனவே தங்கள் பிரதேச மக்களின் அபிவிருத்திகளுக்காக ஜனாதிபதியின் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்கின்றனர். அதனால், அவர்கள் சிங்களவர்களைஆதரிக்கின்றார்கள் என்று எடுத்துக்கொள்ள முடியாது, மேலும் அவர்களின் தமிழ்த்தேசியக் கொள்கையிலும் மாற்றம் காண முடியாது.

மேலும் இதனை தொடர்ந்து அடுத்து தேர்தல், மாகாண சபையாகவோ அல்லது பாராளுமன்ற தேர்தலாகவோ வரலாம். ஆகவே அந்த தேர்தலிலும் பங்கு பற்ற வேடிய தேவை இருக்கின்ற காரணத்தினால் நிச்சயமாக வடக்கு கிழக்கு மக்களில் இருந்தோ அதன் கொள்கையில் இருந்தோ விலக மாட்டார்கள் என நான் நம்புகின்றேன்.

### தமிழ் வேட்பாளரை புறக்கணித்துவிட்டு தமிழ்த் தேசியம் பேசுபவர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

தமிழ் தேசியம் என்பது கொள்கை ரீதியாக, கடந்த 75 வருட காலமாக தந்தை செல்வாவின் அகிம்சை ரீதியான போராட்டம் பின் ஆயுதப் போராட்டம் இடம்பெற்று 2009ம் ஆண்டு மே18 -உடன் முள்ளிவாய்க்காலில் ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டு விட்டது. அதன் பின் கடந்த 15 வருடங்களைப்பார்க்கின்ற போது, தமிழ்த்தேசிய தலைமைத்துவமும் சிதறி இருக்கின்றது. முடிவுகள் எடுக்க முடியாத ஒரு நிலைப்பாடு இருக்கின்றது. சர்வதேச ரீதியாக பேச்சுவார்த்தைகளுக்கு செல்கின்றபோது, அங்கு சொல்லப்படுவது என்னவென்றால், 'நீங்கள் பல கட்சிகளாக இருந்தாலும் இணைந்த வடக்கு கிழக்கு தொடர்பாக ஒரு குரலில் பேச வேண்டும், ஒரு தீர்வைக் கூற வேண்டும்'' என்றுதான். ஆனால் அவ்வாறு செய்ய முடியாமல் இருக்கின்றது. ஏனென்றால் அரசியல் கட்சிகளிலே அது குறித்து முடிவெடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது, அவ்வாறன நிலையை சர்வதேசமும் தட்டிக்கழிக்கின்ற நிலை இருக்கின்றது. எனவே அவர்களையும் ஒன்று படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது.



இந்த நிலையில் தான் தமிழ்தேசிய பொதுக்கட்டமைப்பை, பொது அமைப்புக்கள், தமிழ் அரசியல் கட்சிகள் இணைந்து உருவாக்கினார்கள். இதில் என்னை ஜனாதிபதி வேட்பாளராக நியமித்தனர். இதன் மூலம் ஒரு செய்தியைக் கொடுப்போமாக இருந்தால் எதிர்காலத்தில் சிதறி இருக்கின்ற தமிழ்த்தேசியக் கட்சிகளும் ஒருமித்து பயணிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இந்த தேர்தல் மூலம் கிடைக்கும் என நம்புகிறோம்.

### தமிழர் தேசத்தின் வேட்பாளரான நீங்கள் புலம்பெயர் மக்களுக்கு கூறும் செய்தி என்ன?

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# குமரி கண்ட குமரன்...

**கானா பிரபா**

நம் பண்பாடு நெறியை வாழ்விலில் பதித்த இசையனுபவம்

தன் நிலத்தை, தன் மக்களை நேசிப்பவனே உண்மையான கடவுள் என்றும், அவ்விதம் காவல் தெய்வமாக விளங்கிய முருகனையே தெய்வமாக வழிபட்டதாகவும் சங்க இலக்கியங்கள் சான்று பகிர்கின்றன.

முருகனைத் தலை சிறந்த வீரனாகவும், மன்னர்களின் வீரத்தையும், போர்த்திறத்தையும் ஒப்பிடும் போது அவனே ஒரு முன்மாதிரியாகவும் எடுத்தாளப்பட்டிருக்கிறான்.



“கொற்றவைக் குழவி” என்ற பெயரால் அழைக்கப்பட்டதன் பின்னணியில் கொற்றவைத் தாயின் மகனாக விளங்கிய இந்த முருகக் கடவுள், பஃறுளி ஆற்றின் பன்மலை அடுக்கங்களில் வாழ்ந்த மன்னனாக வாழ்ந்தவன் முருகன் என்றும், நடுகல் வழிபாட்டின் மாண்பையும் கவிஞர் அறிவுமதி தன் “தமிழ் முருகன்” என்ற நூலில் சங்க இலக்கிய வரலாற்றுத் தேடலின் ஆய்வு ரீதியான நூலாகப் பகிர்ந்திருக்கிறார்.

இரு தசாப்தங்களுக்கு முன்னர் நமது மண்ணின் எழுச்சிப் பாடல்களில் ஒன்றான...... பாடலில் நித்யஸ்ரீ மகாதேவன்

"அந்த முருகனுக்கே அவன் நிகரானவன்"

என்று அறிவுமதி அவர்கள் எழுதிய போது எப்படி எங்கள் கடவுளை “அண்ணனுக்கு” ஒப்பிடலாம் என்று கண்டனக் குரல்கள் எழுந்தன.

அந்த நேரத்தில் அவர் தன் ஆராய்ச்சிப் பகிர்வின் வழியாகத் தக்க பதிலடியும் கொடுத்தார். ஆனால் வேதனை என்னவென்றால் இப்படியாக நம் வரலாறு தெரியாமல் மெய் வரலாறு கூறுபவர் களையே இழித்துப் பேசுவது நம் மரபு.



ஈழத்தின் நம்பிக்கை தரும் ஒரு இசை இளவல் மதீசன், மக்கள் படைப்பாக “குமரி கண்ட குமரன்” என்ற இசைப் பெட்டகத்தை ஆக்கியளித் துள்ளார்.

இது காலம் அவருக்குக் கொடுத்த பணியோ தெரியவில்லை. ஆச்சரியமாக, மதீசனே ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இந்த முருகக் கடவுளின் தாய் “கொற்றவை” பெயர் கொண்ட இசை வட்டை முன்னர் வழங்கியுமிருக்கிறார்.

ஈழத்தின் இசை, நாடகங்கள் அவை மரபு வழி புராண இதிகாசக் கதைகளாகவோ அன்றி சமூகப் பிரச்சனைகளின் பிரதிபலிப்பாகவோ, தேச விடுதலை கொண்ட கருப்பொருளிலோ எழுந்த போது ஒவ்வொரு படைப்புக்கும் புதிது புதிதாகப் பாடல்கள் ஆக்கப்பட்டு அவை இசை வடிவம் கொடுக்கப்பட்டு மேடையேறி முடிந்ததும் கரைந்து போய்விடும் அவல நிலையே பெரும்பாலும் நிகழ்ந்து வருகிறது.




தேச விடுதலைக்காகப் போராடும் களத்தில் எழுந்த பாடல்கள், போராட்டம் அழித் தொழிக்கப்பட்ட பின்னரும் தன் தாய்மண்ணின் மீதும், அதன் சமூக பொருளாதார மாற்றங்களின் மீதும் கரிசனை கொண்டு எழும் பாடல்கள் என்று இரண்டு விதமான பண்பினைக் கொண்ட பாடல்களை நம் ஈழத்தவர் சமைத்திருக்கிறார்கள். பின்னையது நடப்புக் காலம்.

“குமரி கண்ட குமரன்” பாடல்களும் அத்தகையதொரு பிரிவுக்குள் வருகிறது. குறி யீட்டையும், இந்தப் பாடல் தொகுப்பின் பின்னால், தசாப்தத்துக்கு முன் நம் இனம் கண்டதொரு வீழ்ச்சியின் படிமங்களைக் குறியீட்டாகக் காட்டி நிற்கின்றது.

ஒவ்வொரு பாடலும் இசை, பயன்படுத் தப்பட்ட வாத்திய அலங்காரங்கள், குரல்கள், தாளக்கட்டு என்று வெவ்வேறு வகையினதாகத் தனித்து நிற்கின்றன. ஆனால் அவை கூட்டாகச் சேரும் போது பக்தியும், வீரமும், வீழ்ச்சியும், நெஞ்சில் கனன்று கொண்டிருக்கும் நெருப்பையும் ஒரே நிலையில் வைத்துப் பார்க்கின்றது.

ஈழத்துப் போர்க்காலத்து இசைப் பாடல் களில் ஒருவகையினதான துன்பியல் பாடல்க ளின் சாயலில் தளர் நடையோடும் இசைக்கப் பட்டிருக்கின்றது. இன்னும் விடியாத் துயரோடு இருக்கும் தமிழ் மண்ணின் ஏக்கக் குரலாய்த் தொனிக்கின்றது.

வரிகளைக் கொணர்ந்த பாடலாசிரியரோடு, பாடகர்கள், ஒலிச்சமப்படுத்தலைக் கையாண் டோர், உப இசை வாத்தியக்காரர்கள் என்று எல்லோருமே இசையமைப்பாளர் மதீசனின் “குமரி கண்ட குமரன்” பாடல்களின் வெற்றிக்கு ஒத்திசைவோடு உதவியிருப்பதைப் பாடல்களைக் கேட்கும் போது புரிகிறது.

இன்றைக்குச் சாமியறையில் இருக்கும் சுவாமிப் படங்களில் இருந்து, ஒரு அரசர் காலத்துப் படம் வரை ஏராளம் நகை நட்டுகள் அணிந்து, பட்டுப் பீதாம்பரங்கள் கொண்டதொரு அமைப்பிலேயே எங்கள் வழிபாட்டு முறை வீட்டுக்குள் இருக்கிறது. ஆனால் தமிழர் பண்பாட்டுக்கும், வாழ்வியலுக்கும் முற்றும் முரணானதொரு கலாசாரப் படிமத்துடனேயே வாழ்ந்து பழகி விட்டோம் என்ற உண்மையை ஓவியர் ட்ராஸ்கி மருது.

அன்றைய காலத்தில் அரசனும் சரி, குடி மக்களும் சரி மிகவும் எளிமையானதொரு தோற்றத்தில் வெற்றுடலும், இடுப்பில் அரைத் துண்டுமாகவே தம் தோற்ற வெளிப்பாடுகளை வெளிப்படுத்தியிருந்தனர். இதனையே நாடு காண் பயணி மார்க்கோ போலோவும் இந்தியாவில் இம்மாதிரியானதொரு வாழ்வு முறையைக் கண்டு அதிசயத்து மன்னனும் மக்களும் ஒருவர் ஆயினர் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஓவியர் மருதுவின் ஓவியங்களிலும் மன்னராட்சியையோ, அல்லது அரசனையோ சித்தரிக்கும் போது இந்த எளிமையை உணரலாம். அவரின் பேச்சு முடிந்ததும் இந்தத் தாக்கத்தில் தானா மருது பணி புரிந்த தமிழ்ப் படமான தேவதையில் மன்னராட்சியின் காட்சிப் புலத்தை எளிமைப்படுத்தியதை உதாரணம் காட்டலாம்.

ஆயிரத்தில் ஒருவன் படத்தின் கலை இயக்குநர் சந்தானம். இந்தப் படம் பேசப்பட்ட அளவுக்கு யதார்த்த பூர்வமாக அணுகிய அந்த அரசர் காலத்துக் காட்சித் திறன் அதிகம் பேசப்படவில்லை. இந்த இடத்தில் இயக்குநர் செல்வராகவனின் நேர்த்தியான உழைப்பைப் போற்றாமல் இருக்க முடியாது.





தேவதை, ஆயிரத்தில் ஒருவன் ஆகியவை தமிழனின் அடையாளத்தை இன்னது இன்னதாகக் காட்டி வர்த்தக ரீதியில் தோல்வி கண்டவை. நிஜம் தோல்வி கண்டு கற்பனை உலகமும் நமக்கு அந்நியமான பண்பாடும் தான் நெருக்கமாக இருக்கிறது. ஈழத்துக் கூத்து மரபில் எழும் மேடை முயற்சிகளில் பண்டைய பாரம்பரிய ஆடை, அணிகளுக்கே முக்கியம் கொடுப்பதையும் இங்கே சொல்லி வைக்க வேண்டும்.

தலைமுறையாய்க் கொண்டாடிய கிரா மத்துக் காவல் தெய்வங்கள் மங்கி விட்டன. இங்கே காட்சிப்படுத்தலில் அந்த வரலாற்றை மீள நிறுவியிருக்கிறார்கள். மலையை ஆண்ட மன்னன் முருகன்,கடல்கோள் காவு கொண்ட இனத்தின் எச்சமாய் நாம், குமரி முனைக்குத் தெற்கே முருகனுடைய மலை என்று அறிவுமதி ஏக்கத்தோடு பதிவு செய்ததன் வரலாற்று இசைப் பதிவாய் இப்படைப்பு மின்னுகிறது.

இன்றும் தென் ஈழத்தில் மலை தோறும் வழிபடப்படுப்படும் எம்பெருமானையும் இப் பெட்டகம் காட்சிப்படுத்தியிருக்கலாம் என்ற ஒரு சிறு குறை மட்டுமே இப்படைப்பில்.

தொடர்ச்சி 20ஆம் பக்கம்



# இந்திய இராணுவத்தினரின் வல்வைப் படுகொலைகளின் 35ஆவது ஆண்டு நினைவுகள்... !

**இறுதிப் பாகம்**

- ***சர்வதேச மன்னிப்புச் சபையின் (Amnesty International) அறிக்கை:***

*சர்வதேச மன்னிப்புச்சபையானது 1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17ம் திகதி வியாழக் கிழமை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய ரெலக்ஸ் செய்தியில் பின்வருமாறு குறிப்பிட்டு, இது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிவிக்கவேண்டும் என்றும் கேட்டுள்ளது. அந்த அறிக்கையில் குறிப் பிட்டதாவது,*

*“ஆகஸ்ட் 2ம் திகதி, வல்வெட்டித்துறையில் இந்திய அமைதிப்படைக்கும், விடுதலைப்புலி களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அதைத் தொடர்ந்து இந்தியப் படையின் எதிர்த்தாக்குதலில் குறைந்தது 51 பொதுமக்கள் கொல்லப் பட்டனர். இதில் ஆறு பெண்களும், ஏழு சிறுவர்களும் அடங்குவர். வல்வெட்டித்துறையில், பொதுமக்கள் வீடுகளில் இருந்து வெளியே இழுத்து வரப்பட்டு முதுகுப்புறமாகச் சுடப்பட்டும், சுவர்களைப் பார்த்து நிக்குமாறு கூறி நிறுத்திவைக்கப்பட்ட நிலையில் சுடப்பட்டும், ஏராளமான கடைகளும், போக்குவரத்துச்சாதனங்களும், மீன்பிடி வள்ளங்க ளும் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளன. இந்திய அரசானது, தமக்கும் போராளிகளுக்கும் இடை யில் ஏற்பட்ட மோதலில் சிக்குண்ட 24 பொது மக்கள் மட்டுமே இறந்ததாகக் கூறிப் பெரு மளவு கொலைகள் நடந்ததை மறுத்துள்ளது. ஆனால் நேரடியாகக் கண்டவர்களின் சாட்சியமங் களும் சுயாதீனமான பொது அமைப்புக்களும் இந்தியப்படையினரின் கொலைகளை உறுதிப் படுத்தியுள்ளன. ஆயுதம் ஏந்தியவர்களை அடக்கு வதற்கான நிகழ்வுகளில், மக்களின் மனித உரிமைகளை மதித்து நடக்கும் அரசின் தலை யாய கடமையில் இருந்து விடுபடுவது என்பது அரசு என்ற ஒழுங்கமைப்பினால் புறக் கணிக்கப்படமுடியாதது ஆகும்” என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

- ***இலண்டன் பைனான்சியல் ரைம்ஸ் (London Financial Times)***

*17.7.89 அன்று வெளியான முன்னணிப் பத்திரி கையான “பைனான்சியல் ரைம்ஸ்”| என்ற பத்திரிகையில் வல்வெட்டித்துறைக்கு நேரில் சென்றுவந்த அதன் நிருபர் டேவிட் ஹௌஸ்கோ பின்வருமாறு எழுதுகின்றார்.*

*“தங்கள் நாட்டு இராணுவம் வெளிநாடு ஒன்றில் தங்கி கெரில்லாக்களை எதிர்த்து சண்டை போடுவதாக இருந்தால், சிலவேளைகளில் காட்டு மிராண்டித்தனமாக நடக்க வேண்டிய கட்டாயம் அதற்கு ஏற்படும் என்பதும், இதனால், உள்ளூர் மக்களின் வெறுப்பையும், அதிருப்தியையும் அது சம்பாதித்துக் கொள்ளும் என்பதும் மேற்கத்திய ஜனநாயக நாடுகளுக்கு அனுபவரீதியாத் தெரிந்த விடயம்தான். அணிசேரா நாடுகளிலேயே முதன் முறையாக வெளிநாடு ஒன்றில் (இலங்கை) தனது இராணுவத்தைக் கொண்டுபோய் அமைதி காக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ள இந்தியா வுக்கு இப்பொழுதுதான் அந்த அனுபவம் கிடைத்துள்ளது. உறவினர்களையும், உடைமை களையும் இழந்தவர்கள் இனி வாழ்க்கையை எங்கே தொடங்குவது, எப்படித் தொடங்குவது என்று தெரியாமல் திகைத்துப்போய் நிற்கின்றனர். கடந்த 2 வருடங்களில், இந்தியப்படையினர் மீது கூறப்பட்டுவந்த பல புகார்களில் இதுதான் மிகப்பெரிய புகாராக இருக்கிறது. இந்தியப் படையின் உயர் அதிகாரிகளின் முன்னிலை யிலேயே இந்த அசம்பாவிதங்கள் நிகழ்ந்துள்ளன. பாரபட்சமற்ற பொது விசாரணை ஒன்றை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுவினர் கேட்டுக்கொண்ட போதிலும், இந்தியப் படையி னர் இதனை நிராகரித்தனர்.*



**வல்வை.ந.அனந்தராஜ்**

- ***ஏசியா வாச் - Asia Watch(ஐக்கிய அமெரிக்க மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு)***

*“இலங்கையின் வல்வெட்டித்துறையில் இம்மாத ஆரம்பத்தில் இந்திய அமைதிப்படையின் படு கொலைகளை விசாரித்து நீதி வழங்குவதற்குப் பதிலாக இந்திய உயர் மட்டத்தினர் அதனை மூடிமறைக்க முயல்வது வெளிப்படையாகத் தெரிகிறது” என ஐக்கிய அமெரிக்க மனித உரிமை கள் கண்காணிப்புக் குழுவின் (ஏசியா வாச்) நிர்வாக இயக்குனர் சிட்னி ஜோன்ஸ் குற்றம் சாட்டியுள்ளார்.*

- ***தி சண்டே டெலிகிராப் (THE SUNDAY TELEGRAPH) லண்டன்***

*”இந்தியாவின் மைலாய’ என்ற தலைப்பில் லண்டனில் இருந்து வெளியாகும் “தி சண்டே டெலிகிராப்” பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் தீட்டியுள்ளது.*

*“ஸ்ரீலங்காவில் அமைதி காப்பதற்காகவே விசேடமாக அனுப்பப்பட்ட இந்தியப்படைகள், இலங்கையில் உள்ள ஒரு சிறிய கிராமத்தைச் (வல்வெட்டித்துறை) சுற்றிவளைத்து பெண்கள், குழந்தைகள் உட்பட 50க்கு மேற்பட்ட தமிழ் சிவிலியன்களைப் படுகொலை செய்துள்ளது. இந்தியாவும் சட்ட ஒழுங்கு அடிப்படையில், ஜனநாயகத்தின் வழி செயல்பட முடியாதவாறு மனச்சோர்வடைந்த பட்டியலில் வந்துள்ளது. படைவீரர் மத்தியில் ஒழுங்கு குலைந்துள்ளது. இந்தியாவின் இப்படுகொலை யானது, வியட் நாமின் மைலாய் போன்றோ அல்லது அதனுடைய அமிர்தசரஸ் படுகொலையைவிட அதிகமாகவோ உள்ளது.*

- ***பிரான்ஸ் மருத்துவக் குழுவினர் வைத்திய சிகிச்சைக்காக வல்வெட்டித்துறைக்குச் செல்வதற்கு இராணுவம்: அனுமதி மறுத் தது:***

*இந்திய இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட் டில் காயமடைந்த பொதுமக்கள் பலருக்கு உள்ளூர் மருத்துவ பயிற்சியாளர்களால் முதலு தவி அளிக்கப்பட்டு அருகிலுள்ள ஊரணி இந்தி ராணி அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். காயமடைந்த மேலும் சிலர் ஆகஸ்ட் 2 ம் தேதி பிற்பகல் 5 மைல் தொலைவில் உள்ள பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு நடந்து சென்றனர். பருத்தித்துறை மருத்துவமனையில் காயமடைந்த பொதுமக்களின் வருகை அதிகரித்த நிலையில் பிரான்ஸ் MSF மருத்துவக் குழுவைச் சேர்ந்த ஜாக்குலின் இந்தப் படுகொலைகள் நடந்த இடத்திற்கு அம்புலன்ஸ் வண்டியை அனுப்ப அனுமதிக்குமாறு இந்திய இராணுவத்தினரைக் கேட்டபோது, அந்த இடத்திற்குச் செல்வதற்கான அனுமதியை வழங்க மறுத்து விட்டதால், அவர்களில் சிலர் குருதிப் பெருக்கினால் இறந்தனர். இந்தத் துப்பாக்கிப் பிரயோகங்களில் காயமடைந்த சாதாரண சிவிலியன்களுக்கு உதவ இந்திய இராணுவ அதிகாரிகள் எந்தமுயற்சியும் எடுக்கவில்லை என்றும் பிரான்ஸ் மருத்துவக் குழுவின் அதிகாரியான ஜக்குலின் தெரிவித்தார். 1989ஆம் ஆண்டு ஒகஸ்ட் 4ஆம் திகதி ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்ட பின்னரேயே வல்வைப் படுகொலைகளில் இருந்தும் தப்பியவர்கள் சிகிச்சைக்காக மந்திகை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். இவ்வாறான மனித உரிமை மீறல்களையும், போர்க் குற்றங்களையும் வல்வெட்டித்துறையில் மேற்கொண்ட இந்திய அரசு, அதில் இருந்து தானும் தப்பித்துக்கொள்வதற் காக, ஜெனிவாவில் இடம்பெற்றுவரும் இலங்கை க்கு எதிரான போர்க்குற்றங்கள் தொடர் பான விசார ணைகளுக்குத் தடையாக இருந்து வருகின்றது.*

- **இந்திய அரச வானொலியான “ஆல் இந்தியா ரேடியோவும்”, தூரதர்ஷன் தொலைக் காட்சியினதும் போலிப் பரப்புரைகள்**

*இவ்வாறான மிகப் பாரிய மனிதப் படுகொலை களை இந்திய இராணுவத்தினர் மேற்கொண்டதை வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களே உறுதிப் படுத்தியபின்னரும், இந்திய அரச ஊடகங்கள் உண்மைக்குப் புறம்பாகப் பின்வரும் செய்தி களை ஒலி, ஒளிபரப்பிக் கொண்டிருந்தன. “இலங்கை, யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் இந்திய அமைதிப்படைக்கும் விடுதலைப் புலி களுக்கும் இடையில் நடந்த மோதலில் சிக்கி 24 சிவிலியன்கள் கொல்லப்பட்டதுடன் விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டதில் சில வீடுகளும், கடைகளும் சிறிது சேதம் அடைந் தன. இம்மோதலில் ஆறு விடுதலைப் புலிகள் கொல்லப் பட்டனர்.” என்று தொடர்ந்து பல நாட்களாகக் கூறிக்கொண்டிருந்ததை, அந்த ஊருக்கு வருகைதந்த*

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# வாக்குகளை குறிவைக்கும் காய்நகர்த்தல்கள்

இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் களம் சூடுபிடித்து வருகின்றது. வழமைபோலவே அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் வாக்குறுதிகள் பலவற்றையும் 'அள்ளி' வழங்கி வருகின்றனர். இந்த வாக்குறுதிகளில் கொஞ்சமேனும் தேர்தலின் பின்னர் 'கிள்ளிக்' கொடுக்கப்படுமா? என்ற நியாயமான சந்தேகம் நாட்டு மக்களிடையே இருந்து வருகின்றது. குறிப்பாக மலையக மக்கள் உள்ளிட்ட சிறுபான்மை மக்களின் நலன்கருதி வழங்கப்படும் வாக்குறுதிகளின் சாத்தியப்பாடுகளில் அதிகளவு சந்தேகம் காணப்படுகின்றது. இவையெல்லாம் சிறுபான்மை மக்களின் வாக்குகளைக் குறிவைத்து இடம்பெறும் காய்நகர்த்தல்களாகவே தென்படுகின்றது. இந்நிலையில் கடந்த கால தேர்தல்களின் போதும் இவ்வாறாக வழங்கப்பட்ட பல வாக்குறுதிகள் காற்றில் பறந்த சம்பவங்களையும் இங்கு நினைவுபடுத்த வேண்டியுள்ளது.

ஒரு நாட்டின் ஜனநாயக ஸ்திரப்பாட்டிற்கு தேர்தல்கள் உந்துசக்தியாக விளங்குகின்றன. மக்கள் தமது பிரதிநிதிகளை அல்லது ஆட்சியாளர்களை தேர்ந்தெடுக்கும் வழிமுறை அல்லது தேர்தல் முறையே பிரதிநிதித்துவ முறையாகும். ஒருவர் சார்பாக ஒருவர் நிற்றல் பிரதிநிதி எனப்படும். மக்களை அரசியல் ரீதியாக தலைமை வகிக்கச் செய்வது பிரதிநிதித்துவம் ஆகும். இந்த வகையில் 'ஆள்பவனை மக்கள் தேர்ந்தெடுத்து நாம் விரும்பும் போது விரும்பியதை பெற்றுக் கொள்ளக் கூடியதும் விரும்பாத போது அவர்களை மாற்றியமைக்கவும் கூடிய வழிமுறையே பிரதிநித்த்துவ ஜனநாயகம்' என்பது அறிஞர் மக்கெங்டர் என்பவரின் கருத்தாகும். இந்த வகையில் கோட்பாட்டு அடிப்படையில் இன்றுவரை மக்கள் தமது பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் மூன்று வகையான பிரதிநிதித்துவ முறைகள் காணப்படுகின்றன.



இனவாரிப் பிரதிநிதித்துவ முறை அல்லது சமூகவாரி பிரதிநிதித்துவ முறை, பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறை அல்லது தொகுதிவாரி பிரதிநிதித்துவ முறை, விகிதாசார பிரதிநிதித்துவ முறை என்பன அம்மூன்று பிரதிநிதித்துவ முறைகளுமாகும். இவற்றுள் சமகாலத்தில் நடைமுறையிலுள்ள விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையானது 1978ம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பினூடாக முன்வைக்கப்பட்டது. இத்தேர்தல் முறை தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் இருந்து வரும் நிலையில் இத்தேர்தல் முறையை மாற்றி புதிய முறையாக கலப்புத் தேர்தல் முறை ஒன்றினை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் கடந்த காலத்தில் வலுப்பெற்றிருந்ததும் தெரிந்ததேயாகும். எனினும் இதன் சாதக விளைவுகள் இதுகாலவரை சாத்தியமாகவில்லை. இந்நிலையில் 1978ம் ஆண்டின் அரசியல் யாப்பின் 94 ம் சரத்து இலங்கை ஜனாதிபதியினை தெரிவுசெய்யும் முறைபற்றி தெளிவாக எடுத்துரைக்கின்றது.

### 50 வீதம் சாத்தியமா?

இலங்கையின் முதலாவது ஜனாதிபதி தேர்தல் 1982 இல் இடம்பெற்ற நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஜே.ஆர்.ஜயவர்தனா 52.91 வீதமான வாக்குகளைப் பெற்று அமோக வெற்றியீட்டினார். இவர் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை 34 இலட்சத்து 50 ஆயிரத்து 811 ஆகும். 1988 இல் இடம்பெற்ற இரண்டாவது ஜனாதிபதி தேர்தலில் ரணசிங்க பிரேமதாசா 50.43 வீதமான வாக்குகளையும், மூன்றாவது ஜனாதிபதி தேர்தலில் திருமதி சந்திரிகா 62.28 வீதமான வாக்குகளையும், மீளவும் நான்காவது ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட சந்திரிகா 51.12 வீதமான வாக்குகளையும் பெற்று வெற்றியீட்டினார். தொடர்ந்து மஹிந்த ராஜபக்ச , மைத்திரிபால சிறிசேன, கோத்தபாய ராஜபக்ச ஆகியோர் வெற்றிபெற்று நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகித்தனர். 2019 இல் இடம்பெற்ற தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச 6,924,255 வாக்குகளை பெற்றிருந்த நிலையில் இது 52.25 வீதமாகும். இந்நிலையில் இம்முறை ஜனாதிபதி தேர்தலில் எந்த ஒரு வேட்பாளரும் 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளை பெற்றுக் கொள்ள முடியாது போகலாமென்றும் கருத்து வெளிப்பாடுகள் இருந்து வருகின்றன.



தேர்தல் எனும்போது கட்சித்தாவல் கலாசாரத்துக்கும் இலங்கையில் குறைவிருக்காது.

இந்த வகையில் எதிர்வரும் செப்டம்பர் 21ம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலிலும் இது எதிரொலிக்கின்றது. பல பாராளுமன்ற உறுப்பினர்கள் பொதுஜன பெரமுனவை நிர்க்கதியாக்கிவிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து கொண்டுள்ளனர். இது பொதுஜன பெரமுனவுக்கு விழுந்த பலத்த அடியாக உள்ள நிலையில், 'ராஜபக்சாக்கள் ரணிலுக்கு செய்த வஞ்சனை திரும்பிவந்து பொதுஜன பெரமுனவை தாக்குகிறது' என்று சிரேஷ்ட பத்திரிகையாளர் டி.பி.எஸ்.ஜெயராஜ் சுட்டிக்காட்டுகின்றார். மேலும் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்ட தம்மிக பெரேரா கடைசி நேரத்தில் கையை விரித்து பெரமுனவை மேலும் நிர்க்கதிக்கு உள்ளாக்கியுள்ளார்.

தேர்தல்களில் வாக்குறுதிகள் முக்கிய இடம் பெறுகின்றன. இக்காலகட்டத்தில் அரசியல் கட்சிகளாலும், வேட்பாளர்களினாலும் வழங்கப்படும் வாக்குறுதிகள் எந்தளவு நம்பகத்தன்மை மிக்கது என்பதனை பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது. இதனடிப்படையில் கடந்த கால தேர்தல்களின்போது வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் பல செயல்வடிவம் பெறாது குப்பைக் கூடைக்குள் போடப்பட்ட வரலாறுகள் அதிகமாகும். இந்நிலையில் கடந்தகாலத்தில் மலையக மக்கள் சார்பாக வழங்கப்பட்ட சில வாக்குறுதிகளை நோக்குவோம்.

இந்த வகையில் கடந்த 2015 ம் ஆண்டு

**துரைசாமி நடராஜா**

'தேசத்திற்கு மீண்டும் உயிரூட்டும் விரைவான வேலைத்திட்டத்தில்' ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி பல வாக்குறுதிகளையும் வழங்கி இருந்தது. தோட்டத் தொழிலாளர்களுக்கான நாட்கூலி ரூபா ஆயிரம் வரை அதிகரிக்கப்படுவதற்கும், அக்கொடுப்பனவிற்கு அரச அனுசரணை தேவைப்படின் அதற்கான நிதி உதவிகளை பெற்றுக் கொடுத்து மேற்குறிப்பிட்ட சம்பள அதிகரிப்பு துரிதமாக செயற்படுத்தப்படும். தோட்ட லயன் அறைகளில் வாழும் குடும்பங்களை அவர்களுக்கே உரித்தான வீட்டில் வசிப்பதற்கும், அவர்களுக்கு தேவையான சுகாதார வசதிகளை வழங்கவும் எமது அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் துரிதமாக முன்னெடுக்கப்படும். தோட்டப்புற சமூகத்தினரின் சுகாதார நலன்களை மேம்படுத்துவதற்கு ஆரோக்கிய நல உட்கட்டமைப்பு அபிவிருத்தியொன்று விரைவாக மேற்கொள்ளப்படும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி வலியுறுத்தி இருந்தது.

### சஜித்தின் வாக்குறுதி

இதேவேளை மைத்திரிபால சிறிசேன தனது நூறுநாள் வேலைத்திட்டத்தில், மலையக மக்களை தற்போதைய லயன் வாழ்க்கையில் இருந்து மீட்டெடுத்து காணியுரிமையுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட நவீன மயமான கிராமிய சூழலில் தனி வீடுகளும், பொது வசதிகளும் அமைத்து கொடுப்பதுடன் இத்திட்டம் முழுமையாக தோட்ட நிர்வாகத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் பிரதேச சபைகளின் மூலம் சேவைகளை பெறக்கூடியவாறு உருவாக்கிக் கொடுக்கப்படும். மலையக மக்களது வாழ்வாதாரக் கட்டமைப்பு, கல்வி, உயர்கல்வி , கலாசார, சுகாதார, பொது வசதிகள் சம்பந்தமாக நிர்வாக அமைப்புகள் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டு அரச சேவைகள் அம்மக்களுக்கு நேரடியாக கிடைக்க ஆவன செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது, கல்வி பொதுத்தராதர பரீட்சைக்கான விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் கற்பிக்க கூடிய விசேட பாடசாலைகளை மலையகத்தில் உருவாக்குதல் போன்ற விடயங்கள் இதில் குறிப்பிடப்பட்டிருந்தன. மேலும் நாட்டின் இளைஞர் யுவதிகள் எதிர்நோக்கும் வேலையில்லாப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் உள்நாட்டு, வெளிநாட்டு மற்றும் சுயதொழில் வாய்ப்புக்களை 10 இலட்சமாக உருவாக்குதல் போன்ற விடயங்களும் இதில் உள்ளடங்கி இருந்தன.



2019 ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது தமிழ் முற்போக்கு கூட்டணி புதிய ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசாவிடம்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# மக்கள் எழுச்சியால் வீழ்ந்த பங்களாதேஷின் பிரதமர் ஹஸீனா



பாஸ்கர்– தமிழ்நாடு

பங்களாதேசுக்கு அடுத்து இந்தியாவா/இந்தியாதானா குறிப்பிட்டு சொல்வதெனில் மோடியா/மோடிதானா ? என்று ஆவலோடு எதிர் பார்க்கின்றவாறு இலங்கை, பாகிஸ்தான் என்பது இன்று/இனி இந்தியாதானா என்று பேச்சில் வரத்தொடங்கிவிட்டவாறு அண்டை நாடு பங்களாதேஷில் மக்கள் எழுச்சி.

17 கோடி மக்கள் தொகை கொண்ட அந்த நாட்டில் சுமார் மூன்று கோடி நபர்கள் வேலையில்லா திண்டாட்டத்தில். அவர்கள் போராட்டம் எனும் வேலைவாய்ப்பை தமதாக்கி கொண்டதன் விளைவே இந்த எழுச்சி.



மக்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் தவிக்கும்போது போராடுவதை தமது வேலைவாய்ப்பாக எடுத்துக்கொள்வது தவிர்க்கவியலாதது. அவ்வாறு இன்றைய பங்களாதேஷ். அந்நாடு குறை வளர்ச்சி(LDC- Least Developed Country) எனும் நிலையிலிருந்து முன்னேறினாலும்(?) வேலைவாய்ப்பில் முன்னேறவில்லை.

இந்நிலையில் இலட்சக்கணக்கான அரசாங்க வேலைக்கான காலி இடங்களை நிரப்பாமல் இருந்துவந்ததோடு தனது கட்சிக்காரர்களுக்கு பலனளிக்கும் விதத்தில் அரசாங்க வேலைவாய்ப்பில் ஒதுக்கீடு முறையை கொண்டுவந்து மாணவர்களின் கடும் கோபத்திற்கு ஆளாகியது ஷேக் ஹஸீனாவின் ஆட்சி. போராடிய மாணவர்களையும் ஏனையோரையும் துரோகிகள் என்று முத்திரை குத்தியதோடு அண்மைய ஒரு மாதப் போராட்டத்தில் மட்டும் குறைந்தபட்சம் முந்நூறுக்கும் மேற்பட்டோரை கொன்றது.



இக்கொலைவெறித் தாக்குதலில் காவல் துறையினரும் இராணுவமும் மட்டும் ஈடுபடாமல் ஆளும் கட்சி ‘அவாமி லீக்’ கட்சியினரும் தீவிரமாக ஈடுபட்டனர். அது மட்டுமல்லாமல் கட்டின துணியோடு ஓடிப்போன பிரதமரை ஓடவிட்ட இம்மாபெரும் எழுச்சியை முதன்மையாக நடத்திய மாணவர் அமைப்பான ‘பாகுபாட்டிற்கு எதிரான மாணவர்கள்’(Students Against Discrimination) அமைப்பை வழிநடத்திய நஹீத் இஸ்லாம் என்பவர் காவல்துறை /உளவுத் துறையினரால் சென்ற மாதத்தில் மீண்டும் மீண்டும் கடத்தப்பட்டு நாட்கணக்கில் சித்திரவதை செய்யப்பட்டு ஒரு பாலத்தில் சுயநினைவற்ற நிலையில் அவரது உடல் கிடந்தது. ஆனாலும் போராட்டம் ஓயாமல் எதேச்சதிகாரத்திற்கு எதிரான போராட்டமாய் பரிணமித்து கல்வியாளர்கள், ரிக்சா ஓட்டுநர்கள் என வெவ்வேறு வர்க்கத்தினர் பங்கேற்ற ஜனநாயக உரிமைக்கான போராட்டமாய் உருவெடுத்தது.



பின்னர் ஏனைய மைய நீரோட்டக் கட்சிகளும் பங்கேற்றன. இன்னொரு புறத்தில் ஊரடங்கு, இணைய சேவை ரத்து போன்றவற்றின் வாயிலாகவும் அரசு அடக்குமுறை விரிந்தது. இதனாலெல்லாம் போராட்டம் நிற்காமல் பிரதமர் ஹஸீனாவின் பாதுகாப்பே கேள்விக்குள்ளாகும் விதத்தில் அவர் மக்களால் சுற்றி வளைக்கப்படும்போது இராணுவம் வேறுவழியின்றி தனது இருத்தலை காப்பாற்றிக் கொள்வதற்கு அதிகாரத்தை கைப்பற்றும்முகமாக ஹஸீனாவுக்கு வெறும் 45 நிமிடங்கள் மட்டுமே அவகாசமளித்து தப்பியோடச் செய்தது.

பங்களாதேஷ் மக்களின் இந்த எழுச்சியானது வெறுமனே அரசாங்க வேலைவாய்ப்பு தொடர்பான ஒதுக்கீட்டிற்கு எதிராய் மட்டும் இல்லை. கடந்த பதினைந்து ஆண்டுகளாய் ஒரே கட்சியின் ஒரே பிரதமரின் ஆட்சி. மைய நீரோட்ட கட்சித் தலைவர்களை சிறைப்படுத்தி தன்னை தானே பிரதமர் பதவியில் தேர்ந்தெடுத்துக்கொண்டார். ஏனைய மைய நீரோட்ட எதிர்க்கட்சிகள் சிறைப்பட்டதோடு தேர்தல் களை புறக்கணித்தன. கடந்த ஜனவரி மாத தேர்தலின் போதும் இதுதான் நடந்தது.

உலகத்திற்கே ஆடைகளை சப்ளை செய்யும் பங்களாதேஷின் ஆடைத் தொழிலாளர்களின் போராட்டமும் அதே ஜனவரியில்தான் நடைபெற்றது. மேற்காண் நாடாளுமன்றத் தேர்தலின்போதும் ஆடைத் தொழிலாளர் போராட்டத்தின்போதும் ஹஸீனா கையாண்டவிதம், வேலையின்மை, பணவீக்கம் போன்றவை ஹஸீனாவை துரத்தியடிப்பதற்கு ஜூலையில் தொடங்கிய போராட்டம் ஆகஸ்ட் ஐந்தாம் நாளில் வெற்றி பெற்றது.

போராட்டத்தை தொடங்கி முதன்மையாக தலைமை தாங்கி வெற்றி பெற்றதற்கு மாணவர்களே காரணகர்த்தா என்றாலும் போராட்டம் அனைத்துப் பிரிவினரின் ஆதரவு மற்றும் பங்கேற்பையே தழுவியிருந்தது. காவல்துறையினரும் இராணுவமும் இத்தகைய போராட்டத்தை ஒரு கட்டத்திற்கு மேல் ஒடுக்குவதற்கு தயாராக இல்லை. அதனால்தான் இராணுவத் தலைமை தளபதி ஹஸீனாவை வெளியேறச் செய்து அதிகாரத்தை கைப்பற்றினார் ஜெனரல் வேக்கர்-உஸ்-ஸமான்.

ஹஸீனாவின் உறவினரான இவரை இப்பதவிக்கு அதனால் நியமிக்கப்பட்டிருந்தாலும் இராணுவமும் கேள்விக்குள்ளாகிவிடும் என்பதால் இவ்வாறு செய்தார்.

மாணவர்கள் அதன் பின்னரும் தமது பாத்திரத்தை ஆற்றும்முகமாக இடைக்கால அரசாங்கம் அமைய வைத்து அவர்கள் முன்மொழிந்த முகமது யூனுஸ் பிரதமரானார்.

அது மட்டுமல்லாமல் 13 உறுப்பினர்களை கொண்ட ஆலோசனை குழுவையும் முன்மொழிந்து அதில் மைய நீரோட்ட எதிர்க்கட்சிகள், குடிமைச் சமூகத்தினர், மதச் சிறுபான்மையினர், பெண்கள், முன்னாள் இராணுவ உயரதிகாரிகள் என பலதரப்பினரும் இடம்பெறுமாறு பார்த்துக் கொண்டனர்.



மேலும் மேற்காண் அமைப்பினர் தொண்டர் படையினராகவும் செயற்பட்டு சாலைப் போக்குவரத்து மற்றும் சட்டஒழுங்கை பராமரிக்கும் அளவுக்கு அவர்களின் பாத்திரம் நீடிக்கிறது. இன்னொரு புறத்திலோ மதச் சிறுபான்மையினர் மீதான தாக்குதலுக்கு எதிராய் களத்தில் நிற்கிறார்கள். இவர்களின் எழுச்சி முடிந்துவிட்டது என்றெண்ணி உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ஏனைய நீதிபதிகளுடன் தன்னிச்சையாய் கலந்தாய்வுக் கூட்டத்தை நடத்தியதை எதிர்த்து அவரது பதவி விலகலை கோரி முற்றுகைப் போராட்டத்தை நடத்தி அவரது பதவியை வெற்றிகரமாய் பிடுங்கினார்கள்.

ஹஸீனாவின் வீழ்ச்சி என்பது அவருக்கு மட்டுமல்லாமல் அவரது நீண்ட கால தெற்காசிய எஜமானனான இந்தியாவுக்கும் ஒரு வகையில்

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

# முற்போக்கு முதலாளித்துவமா? மோசடி முதலாளித்துவமா?

11.08.2024 ஆங்கில இந்து நாளேட்டில் (பக்.14) நோபல் பரிசுப் பெற்ற பொருளியல் அறிஞர் ஜோசப் ஸ்டிக்லிசின் நேர்காணல் வெளியிடப்பட்டது. நேர்காணலை எடுத்த திரு.பிரசாந்த பெருமாள் எழுப்பிய நான்கு கேள்விகளுக்கு ஸ்டிக்லிசு விடையளித்துள்ளார்.

கடந்த 15 ஆண்டுகளில் உலகமயமாக்கல் பற்றியும், சந்தைப் பொருளாதாரம் ஒரு சார்பாக இயங்குவது பற்றியும் ஏழு நூல்களை ஸடிக்லிசு எழுதியுள்ளார்.

இந்நூல்களில் வளர்கின்ற நாடுகளிலிருந்து வளர்ந்த நாடுகள் இயற்கை வளங்களைச் சுரண்டுவதால், சுற்றுச்சூழலும் வளர்கின்ற நாடுகளின் மக்களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்ற கருத்தை வழங்கியுள்ளார்.

தனது (Free-fall – Free Markets and Sinking of the Global Economy) 'தடையற்ற வீழ்ச்சி' என்ற நூலில், "வாஷிங்டன் கொள்கைத் திட்டமும், அதன் தொடர்பான அதிதீவிர சந்தைப் பொருளாதாரமும் இறந்துவிட்டன. இதற்கு முன்பு வளர்ந்த நாடுகளுக்கும், வளர்கின்ற நாடுகளுக்கும் சரிசமமான போட்டி போன்ற கருத்து விவாதம் முற்றுப் பெற்றுவிட்டது. பணக்கார நாடுகள் தங்கள் நாடுகளின் தனியார் நிறுவனங்களை எவ்வகையில் காப்பாற்ற முயற்சிக்கின்றனவோ, அதே கொள்கையை ஏழை நாடுகள் பின்பற்ற முடியாது. மோசமான முறையில் மேலாண்மை செய்யப்பட்ட உலகமயமாதல் இடர்களை இந்த நாடுகள் உணர்ந்துவிட்டன" என்று குறிப்பிட்டுள்ளார்.

"சமத்துவமின்மையின் விலை - இன்றைய சமூகம் எவ்வாறு நமது எதிர்காலத்தை ஆபத்தில் ஆழ்த்துகிறது" (The Price of Inequality – How today's divided Society Endangers our Future),என்ற நூலில் ஸ்டிக்லிட்சு, "அமெரிக்காவின் அரசியலமைப்பு பணக்காரர்கள் பக்கம் சாய்ந்துவிட்டது. அதனால் ஏற்றத்தாழ்வுகள் பெருமளவில் பெருகியுள்ளன." அமெரிக்காவின் ஒரு விழுக்காட்டு மக்களின் நலனிற்காக ஒரு விழுக்காட்டினர் ஆட்சிப் படைக்கின்ற, ஒரு விழுக்காட்டினரின் ஆட்சிதான் நடக்கின்றது என்றும் சுட்டியுள்ளார்.

இத்தகைய முதலாளித்துவ விமர்சனக் கருத்துக்கொண்ட ஸ்டிக்லிட்சு, இந்து நாளிதழுக்கு அளித்த பேட்டியில், முற்போக்கு முதலாளித்துவத்தைப் பின்பற்றுவதற்குப் பெரும் வாய்ப்புகள் உள்ளன என்று குறிப்பிட்டுள்ளது நகைச்சுவைதானோ என்று எண்ணம் தோன்றுகிறது.



'ஓநாய்களின் சுதந்திரம் என்பது ஆடுகளின் மரணம்தான்' என்ற தத்துவ அறிஞரான இசையா பெர்லின் கருத்தை மேற்கோள் காட்டியுள்ளார்.

மேலும், 'ஏழைகளின் செலவில்தான் பணக்காரர்கள் பலனடைகின்றனர்' என்ற கருத்தையும் கூறியுள்ளார். இதே போன்று மற்றொரு கேள்விக்கான பதிலில்,

'தீவிரமான முதலாளித்துவ அமைப்பு முறையில் அதிக அளவிற்கு ஏற்றத்தாழ்வுகளும், சுரண்டலும், முற்றுரிமை அதிகாரமும், பொருளாதார நிறையற்றத்தன்மையும், சுற்றுச்சூழல் பாதிப்பும் மோசமாகவே இருக்கும் என்ற கருத்தைக் குறிப்பிடுகிறார்.

சந்தைப் பொருளாதாரம் சரியான போட்டியில் அமையாது என்ற கூறுவதும், அது பாடத்திட்டத்தில் உள்ள ஏட்டுக்சுரைக்காய் போன்றது என்ற கேள்விக்கு, "நமது சந்தையில் போட்டியுள்ளது.

கூகுள் மைக்ரோசாப்ட், பேஸ்புக் போன்ற நிறுவனங்கள் போட்டித்தன்மையில்தான் செயல்படுகின்றனஎன்றும் குறிப்பிட்டுவிட்டு, "சந்தையில் போட்டித்தன்மையில் ஏற்படும் சிறிதளவு சரிவு கூட பொருளாதாரத்தில் திறமையற்றத் தன்மையும், பெருமளவிலான சுரண்டலுக்கு வழிவகுத்துவிடும்" என்று குறிப்பிடுகிறார்.



மு.நாகநாதன்,பேராசிரியர்

முற்போக்கான முதலாளித்துவம் இந்தியாவிற்கு எவ்வகையில் பொருத்தமாக அமையும் என்ற கேள்விக்கு ஸ்டிக்லிட்சு, "இந்தியா பெருமளவிற்குத் தாராளமயமாக்கல் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. நிதித்துறையில் தாராளமயமாக்கல் உள்ளது. ஆனால் சுகாதாரம், வீட்டு வசதி போன்ற துறைகளில் உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கவில்லை. தங்களது நியாயமான வரிப் பங்கினை அரசிற்குச் செலுத்தாத பெரும் கோடீசுவரர்கள் உருவாக அரசு வழிவகுத்துள்ளது. எனவே, நான் கூறுகின்ற முற்போக்கான முதலாளித்துவம் வளர்வதற்கு வாய்ப்புள்ளது" என்று பதிலளித்துள்ளார்.

இந்தக் கேள்வி பதில்களில் பெரும் முரண்பாடுகள் உள்ளன.

2024ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் மட்டும் வேலையில்லா இளைஞர்களின் எண்ணிக்கை 9 விழுக்காடாக உயர்ந்துள்ளது என்று இந்தியப் பொருளாதாரக் கள ஆய்வு மையம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இது கடந்த 8 ஆண்டுகளில் காணப்படாத வேலையின்மையின் அளவாகும்.

உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் திட்டங்கள் பெரும் தோல்வியைத் தழுவி வருகின்றன என்பதற்கான புள்ளிவிவரங்களை 2023ஆம் ஆண்டின் உலக முதலீட்டு அறிக்கையில் சுட்டப்பட்டுள்ளது.

உலகமயமாக்கல் திட்டத்தை நடைமுறைப் படுத்திய 1990ஆம் ஆண்டுகளில் வெளிநாட்டு முதலீடு 0.1 விழுக்காடாக இருந்தது. 2020ஆம் ஆண்டில் 6.5 விழுக்காடாக உயர்ந்தது.

ஆனால் இத்தகைய முதலீடுகளைப் பெறுவதற்காக ஒன்றிய அரசு அளித்த நேர்முக, மறைமுக வரிச்சலுகைகளைக் கணக்கிட்டால் பல இலட்சம் கோடி ரூபாய்களைத் தாண்டும்.

இவற்றைத் தவிரப் பன்னாட்டுப் பெரு நிறுவனங்களுக்காக அளிக்கப்பட்ட நிலங்கள், மின் இணைப்பு, சாலை வசதி, நீர் வழங்கல் போன்ற அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு அரசு பல இலட்சம் கோடிகளை இழந்துள்ளது.

இத்தகைய இழப்புகளுக்குப் பிறகு வெளிநாட்டு முதலீடுகள் கடந்த பத்தாண்டுகளில் படிப்படியாகக் குறைந்தே வருகிறது.

உலக முதலீட்டு அறிக்கையின்படி வெளிநாட்டு முதலீடு 2023ஆம் ஆண்டில் 2.2 விழுக்காடாகச் சரிந்துள்ளது.

இதைத் தவிர வெளிநாட்டு முதலீடுகள் இருப்பிலும் இந்தியா பெரும் சரிவினை நோக்கி பயணம் செய்கிறது.

வெளிநாட்டு முதலீடுகள் இருப்பில் (Foreign direct investment stock) நெதர்லாந்து, 5.5. விழுக்காடு, சிங்கப்பூர் 5.4 விழுக்காடு, ஆனால், இந்தியாவின் வெளிநாட்டு முதலீடு இருப்பு 1.1. விழுக்காடே ஆகும்.

உள்நாட்டு வெளிநாட்டு முதலாளித்துவ நிறுவனங்களுக்கு வரிச்சலுகைகளைத் தொடர்ந்து ஒன்றிய அரசு வாரி வழங்கி வருகிறது.



சான்றாக, நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் நேர்முக வரியைப் (Corporation Income Tax) புதிதாகத் தொடங்கும் நிறுவனங்களுக்கு 22 விழுக்காட்டிலிருந்து 15 விழுக்காடாக ஒன்றிய அரசின் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 2019ஆம் ஆண்டில் குறைத்தார்.

இதன் காரணமாக, 2023-24ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த வருமான வரி வருவாய் 10 விழுக்காடாகக் குறைந்துள்ளது.

பல இலட்சம் கோடி வரிச்சலுகைகளை அளித்த பிறகும் புதிய முதலீடுகளைப் பெற இயலவில்லை என்பதற்கு இது சரியான சான்றாகும்.

அதே நேரத்தில் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த அரசு, தனி ஊழியர்கள் ஆகி யோர் வருமான வரி செலுத்தியவர்களின் எண்ணிக்கையும் வருமான வரி வழியாக வந்த வருவாயும் ஒன்றிய அரசிற்கு அதிகரித்துள்ளது.

இந்த நடுத்தர வருமானப் பிரிவினரின் எண்ணிக்கை 2013-14 முதல் 2022-23 வரை 3.6 கோடியிலிருந்து 7.5 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது.

ஏழை நடுத்தர வருமானப் பிரிவினரின் குடும்பச் சேமிப்பு 2021ஆம் ஆண்டில் 34 இலட்சம் கோடியாகும். 2023இல் குடும்பச் சேமிப்பு அளவு 17 இலட்சம் கோடியாக இந்தியாவில் சரிந்துள்ளது.

இதே காலகட்டத்தில், 2023இல் ஏழை நடுத்தரப் பிரிவினரின் கடன் 47 இலட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.

2024இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகுச் சென்ற மாதம் ஒன்றிய அரசு அளித்த நிதிநிலை அறிக்கையில் சுகாதாரம், கல்வி போன்ற மானுட வளத்தைப் பெருக்கும் துறைகளுக்கு நிதியளவு குறைக்கப்பட்டுள்ளது.

இத்தகையபுள்ளிவிவரங்களின்அடிப்படையில் பார்த்தால் ஸ்டிக்லிட்சு எதை முற்போக்குப் பொருளாதாரம் என்று அழைக்கிறார்?

ஸ்டிக்லிட்சு நேர்காணலில் குறிப்பிட்ட தீவிர முதலாளித்துவத்தைவிட இந்தியாவில் கொடுங் கோன்மையான பொருளாதாரம் தான் தற்போது இயங்கி வருகிறது. நிதி நிறுவனங்களின் மோசடி, பங்குச் சந்தையில்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# ஆங்கில மொழிக்கான நமது பதற்றமும் ஆங்கில நாட்டின் மொழிப் பதற்றமும்

**பாகம் 9**

ஆங்கிலம் தான் உலகம்! ஆங்கிலம் இன்றி ஒரு அணுவும் அசையாது! ஆங்கிலம் இருந்தால் மட்டுமே வணிகம், வேலை வாய்ப்புகள் என நம்மைப் போன்ற பிரித்தானியக் காலனியாதிக்கத்தின் கீழ் இருந்த நாடுகள் ஆங்கிலத்திற்கு அடிமைசாசனம் இன்னும் வாசித்து வரும் வேளையில், ஆங்கிலம் பேசும் நாடுகள் உலக ஓட்டத்தோடு இணைய வேண்டுமெனில் ஆங்கிலம் மட்டும் போதாது என்ற போக்கில் பயணிக்கத் தொடங்கியுள்ளது.

**இங்கிலாந்தின் நிலைமை:**

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறிய பின்னர், பல மொழிகள் கற்க வேண்டிய அவசியம் குறித்தான விவாதங்கள் மேலெழுந்து வந்தாலும், கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்கும் மேலாகவே, 'பிரித்தானியாவின் ஒற்றை மொழி அறிவு வருங்கால வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் என்ற எச்சரிக்கைகள் வரத்தொடங்கியிருந்தன.




குறிப்பாக 2013இல், பிரித்தானிய அவை (British council) வெளியிட்ட, "வருங்கால மொழிகள்" என்னும் ஆய்வறிக்கையில் பிரித்தானியாவின் வளர்ச்சி, பாதுகாப்பு, உலகத்துடனான உறவாடலுக்கும் பன்மொழி அறிவு அவசியம் என்றும் அதற்கென ஸ்பானிஷ், மாண்டரின், ஃபிரன்சு, அராபிக், ஜெர்மன் – (முதல் 5), இத்தாலியன், டச்சு, போர்த்துகீசு, ஜப்பானியம், ருசிய மொழிகள் ஆகிய 10 மொழிகளை வகைப்படுத்தியிருந்தனர்.

மே 2016இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் வெளியிட்ட The Value of Languages அறிக்கையில், பன்மொழிப் புலமைகள் இல்லாமையால், "பிரித்தானியாவின் மென் அணுகுமுறைக்கான வாய்ப்புகள் குறைந்து, தேசப் பாதுகாப்பில் குறைபாடுகள் வரும், அதோடு, ஐரோப்பிய ஒன்றியக் கூட்டிலும் ஐ.நாவின் உறவிலுமே வருங்காலத்தில் பாதிப்பு ஏற்படும்" என்று தெரிவிக்கப்பட்டது.

**வணிகத்தில் சறுக்கல்:**

பேராசிரியர் ஜேம்ஸ் ஃபோர்மேன் அவர்களின் ஆய்வறிக்கையை சுட்டிக்காட்டி, 2013இல் செய்தி வெளியிட்டு இருந்த The Guardian இதழ், "பன்மொழிப் புலமைக் குறைப்பாட்டினால், பிரித்தானியா வருடத்திற்கு 3.5% GDP இழப்பைச் சந்திக்கிறது " எனத் தெரிவித்தது.

British Academy's Born Global Initiative-ன் ஆராய்ச்சியாளர் பெர்னாட்டட்டெ, "பிரித்தானியாவின் பொருளை பிற நாடுகளுக்கு விற்பனைச் செய்யும் பொழுது மொழிகள் தெரியாதக் காரணங்களால் பொருளாதார இழப்பை மட்டுமல்ல, முறைப்படியான தகவல் பரிமாற்றங்களின் தடையால், சட்ட சிக்கல்களையும் எதிர்கொள்ள நேரிடும் என எச்சரித்திருந்தார்.

அடுத்ததாக, Think Global மற்றும் British Council இணைந்து நடத்திய சுற்றாய்வில், 500 வணிகக்குழுமத் தலைவர்களில் 74% பேர், பிரித்தானியாவின் இளைஞர்களுக்கு பல மொழிகளில் திறமை அவசியம் எனக் கூறியிருந்த னர்.

அதன் தொடர்ச்சியாக, British Chambers of Commerce நடத்திய சுற்றாய்வில், 62% பிரித்தானிய நிறுவனங்கள் மொழிவளத் தடையால் ஏற்றுமதி வணிகத்தில் பின் தங்கியுள்ளதாகவும் ஏற்கனவே ஏற்றுமதி தொழில் செய்யும் 70% நிறுவனங்கள் மொழிகளின் வளம் குறைவால் வருங்காலத்தில் இழப்பைச் சந்திப்பார்கள் எனவும் எச்சரித்திருந்தனர். Aston Business School 2021இல் வெளியிட்ட அறிக்கையில், பிரித்தானியாவின் சிறு-குறுந்தொழிலில் பல மொழிகளின் அறிவுக் கூட்டால், 30% வளர்ச்சியை அடுத்த 5 ஆண்டுகளில் பெற முடியும் என எடுத்துரைத்தனர்.



முனைவர் விஜய் அசோகன்,
கல்வியாளர்

Languages of Global importance ஆய்வறிக்கையில், "அறிவியல், கணிதம் தொழில்நுட்பக் கல்விக்கு ஈடாக பன்னாட்டு மொழிக் கற்கையிலும் பிரித்தானியா முக்கியத்துவத்தை அதிகரிக்க வேண்டும் எனத் தெரிவித்தனர்.

**மொழி முதலீடும் வணிக வருவாய்களும்:**

ஏப்ரல் 2018இல் வெளியான European Commission's Flash Barometer அறிக்கையில், பிரித்தானியாவில் 32% பேருக்கு மட்டுமே ஆங்கிலத்தோடு கூடுதல் மொழிகளில் புலமை இருப்பதாகவும், ஃபிரான்சில் 79%, ஜெர்மனியில் 91%, ஏனைய ஐரோப்பிய நாடுகளில் 80% ஆங்கிலம், தாய்மொழி, பன்னாட்டு மொழிப் புலமை வளர்த்துள்ளமைச் சுட்டிக்காட்டப்பட்டது.



2020 முதல் 11-16 வயதினருக்கு கற்றுக் கொடுக்கப்படும் பல மொழிகளின் கல்வி வழியே 2020-2050 வரையில் உருவாகும் உலகத்தொடர்பு, அதனால் மாற்றமடையும் வணிகத்தின் மூலம் பல்லாயிரம் மில்லியன் பௌண்டு பொருளாதார லாபம் கிடைக்கும் என கணக்கிட்டனர். உதாரணமாக, பிரித்தானியாவின் 10 சதவீத இளையோர்கள் அரேபிய மொழியைக் கற்பதன் வழியே 2050இல் 944 மில்லியன் வரையும், 10 சதவீத இளையோர்கள் மாண்டரின் கற்கும்பொழுது, 730 மில்லியன் வரையும் ஃபிரன்சு மொழி வழியே 625 மில்லியன் வரையிலும் பிரித்தானிய பௌண்டு பொருளாதார லாபம் ஈட்ட வாய்ப்புகள் கூடிவரும் என்கின்றனர்.

**ஆங்கில மொழி பேசும் நாடுகளின் பதற்றம்**

பிரித்தானியக் கல்விக்கழகம், அமெரிக்கக் கலைக் கழகம், ஆஸ்திரேலிய சமூக அறிவியல் கழகம், ஆஸ்திரேலிய மனிதவியல் கழகம், கனடா உயரியச் சமூகவை இணைந்து 2020இல் வெளியிட்டக் கூட்டறிக்கையில், "கொரோனா பெருந்தொற்றின் காலம் உணர்த்தியச் செய்திவழி, முன்னெப்பொழுதும் இல்லாத அளவிற்கு மனிதகுல வரலாற்றில், பாதுகாப்பு, சுகாதார மேம்பாட்டிற்காக உலகளாவிய அளவிலான கூட்டுச் சேர்க்கை எல்லா நாடுகளுக்கும் அவசியம் ஆகிறது" என்றனர்.

பன்மொழிப் புலமைகள் வழியாக மட்டுமே, சமூகம், அரசியல், பொருளாதாரக் கூட்டில் வெற்றியடைய முடியும், அதன் வழியாகவே, பல்துறை ஆராய்ச்சிகள் கல்வித்துறையிலும் சுகாதாரத்துறையிலும் மேம்படும் என்றுத் துரைத்தனர்.

இத்தகைய பன்மொழிப் புலமை வளர்ப்பில், ஆங்கிலம் மட்டுமே அறிந்தச் சமூகம் (Anglophone communities) எல்லா நாட்டினருக்கும் ஆங்கிலம் தெரிந்திருக்கும் என்ற கற்பனையால் தடையாக உள்ளது என்றனர்.

**இந்தியாவின் மும்மொழிக் கொள்கை:**


இந்தியச் சூழலில் இந்த உலக ஓட்டத்தை ஒப்பிட்டுப் பார்ப்போம். மும்மொழி அவசியம் என்ற வாதம் பெருகும் நிலையில், ஆம், தாய்மொழி, காலனியாக்கத்தின் சுவட்டின் வழியாக வும் உலகத்தோடு நிகழ்கால இணைப்பிற்காகவும் ஆங்கில மொழி, ஆங்கில நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம், நார்டிக் நாடுகள் போன்றவைகள் பரிந்துரைக்கும் பன்னாட்டு தொடர்பு மொழிகளில் ஒன்று என முன் செல்வதே எல்லோருக்கும் சிறப்பாகும். இந்திப் பேசும் மாநிலங்கள், ஏனைய இந்திய மாநிலங்களிலும் இதுவே சாத்தியாகும்பொழுது அனைவருக்கும் வளர்ச்சி கிட்டும்.



இந்திய மொழிகளில், ஒருவேளை இந்தியை மூன்றாம் மொழியாக நாம் தேர்ந்தெடுத்தால், இந்திப் பேசும் மாநிலங்கள், அவர்களின் தாய்மொழியான இந்தியை முதலில் தேர்ந்தெடுப்பார்கள், உலக ஓட்டத்தில் ஆங்கிலம், வருங்காலத்திற்கான பன்மொழிகளின் வாய்ப்பில் பன்னாட்டு மொழியென முன் செல்வர், ஏனைய மொழிப் பேசும் மாநிலத்தவர்கள் வருங்கால உலகில் தேங்கி விடுவோம். இங்கே எல்லோரும் வளர வேண்டும், சமமாக வளர வேண்டும், அதன்வழியாகவே வளமான இந்திய ஒன்றியத்தினை நாம் எல்லோரும் இணைந்து உருவாக்க முடியும்.

• • •






# உக்ரைனின் போர் வியூகத்தை ரஸ்யா முறியடிக்குமா?

வேல்ஸில் இருந்து அருஸ்

உக்ரைன் படையினர் 2022 ஆம் ஆண்டு கோடைகாலத்தில் கார்க்கோவ் பகுதியில் மிகவும் குறுகிய பாதையூடாக மேற்கொண்ட ஊடறுப்பு தாக்குதல் போன்ற ஒரு தாக்குதலை கடந்த ஆகஸ்ட்டு 6 ஆம் நாள் ரஸ்யாவின் கேர்க்ஸ் பகுதியில் மேற்கொண்டுள்ளனர்.



ஆனால் தற்போது நேட்டோ படைத்துறை கூட்டணியின் செய்மதிகளையும், வானிலிருந்து அவதானிக்கும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி ரஸ்யாவின் பலவீனமான பாதுகாப்பு எல்லைப் பகுதியை கண்டறிந்து நகர்வை மேற்கொண்டுள்ளனர்.


முதலில் சிறிய சிறப்பு படையினர் ஒரு நகர்வை மேற்கொண்டு ரஸ்ய படையினரின் பலமான பாதுகாப்பு நிலைகளை தாண்டி சென்று அவர்களின் பின்தள விநியோக வழிகளை தடை செய்த பின்னர் தமது நிலைகளை பலப் படுத்தியதும் மிகப்பெரும் படையணி தனது நகர்வை ஆரம்பித்துள்ளது.

ரஸ்யாவின் எல்லைக்காப்பு படையினர் சாதாரண இயந்திரத் துப்பாக்கிகள் மற்றும் மோட்டார்கள் சகிதம் தான் தமது நிலைகளை தக்கவைத்திருந்தனர். ஆனால் அவர்களின் பலவீனமான நிலைகள் தற்கொலை தாக்குதல் விமானங்கள் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் மூலம் தகர்க்கப்பட்டுள்ளன.



இந்த தாக்குதலை எதிர்கொள்ளும் நிலையில் ரஸ்யப் படையினர் இருக்கவில்லை என தெரிகின்றது.

இந்த தாக்குதலின் பின்னர் உக்ரைன் படையினர் தமது கனரக ஆயுதத் தாக்குதல்கள் படையினரின் நகர்வுக்கான வழியை ஏற்படுத்தியிருந்தனர். இந்த பாதை ஊடாக பிரித்தானியா, ஜேர்மனி, போலந்து போன்ற நாடுகளில் நன்கு பயிற்சி அளிக்கப்பட்ட உக்ரைன் படையினரும், நேட்டோ படையினரும் உள்நுழைந்துள்ளனர்.



இதன்போது உக்ரைன் படையினர் நேட்டோவின் இலத்திரனியல் போர் தொழில் நுட்பங்களை அதிகம் பயன்படுத்தி ரஸ்ய படையினருக்கு இடையிலான தொடர்புகளை குழப்பியுள்ளனர். களமுனையில் என்ன நடைபெறுகின்றது என்பதை ரஸ்ய படையினரை அறியமுடியாதவாறு செய்துள்ளனர். படையினருக்கு இடையிலான தொடர்பாடல்கள் மட்டுமன்றி பொதுமக்களுக்கு இடையிலான தொடர்பாடல்களும் தடைசெய்யப்பட்டிருந்தன. பாதகமான சூழ்நிலைகளை எவ்வாறு சமாளிப்பது என்ற நடைமுறையானது ரஸ்யாவின் எல்லைப் பாதுகாப்பு படையினருக்கு குறைவாகவே இருந்துள்ளது.




கேர்க்ஸ் பகுதியில் இருந்த ரஸ்யாவின் பலமான பாதுகாப்பு நிலைகள் சுற்றிவளைக்கப்பட்டன. விநியோக பாதைகளும் அடைக்கப்பட்டன. ஆளஊடுருவும் சிறு குழுக்கள் ஆளமான பகுதிகளுக்குள் நகர்ந்து பிரதான சாலைகளிலும் தாக்குதலை மேற்கொண்டு அந்த பிராந்தியத்தில் ஒரு பதற்றமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருந்தன.



பிரதான சாலைகளை ஆளஊடுருவும் படையினர் கைப்பற்றியதால் உதவிக்கு படையினரை அனுப்புவதில் கடும் நெருக்கடிகள் ஏற்பட்டிருந்தன. இந்த நிலையைப் பயன்படுத்தி உக்ரைன் படையினர் பெருமளவில் நகர்ந்து பல கிராமங்களை கைப்பற்றியுள்ளனர்.

அதேசமயம், மிகப்பெரும் பிரச்சார மற்றும் உளவியல் போர் ஒன்றையும் நேட்டோ படையினர் மேற்கொண்டிருந்தனர், உக்ரைன் படையினர் 300 கி.மீ தூரம் முன்நகர்ந்ததாகவும், மொஸ்கோவை நோக்கி செல்வதாகவும், பெருமளவான ரஸ்ய படையினர் சரணடைந்து வருவதாகவும் காணொளிகள் மற்றும் படங்களுடன் திரிபுபடுத்தப்பட்ட செய்திகள் பரப்பப்பட்டது மக்களிடமும், படையினரிடமும் அச்சங்களையும் பதற்றத்தையும் தோற்றுவித்திருந்தது.



ஒரு தெளிவான முன்னரங்கு இல்லாததாலும் உக்ரைன் படையினர் தொடர்ந்து நகர்வதாலும்

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

## இந்திய இராணு ... தொடர்ச்சி ...

ஐரோப்பிய நாடுகளின், இந்தியாவினதும் பத்திரிக்கையாளர்கள் எள்ளிநகையாடியதையும் மறக்க முடியாது.

- **இந்திய இராணுவத்தினர், மிகச் சிறந்த ஒழுக்கமுள்ளவர்கள்; லோக்சபாவில் இந்தியப் பிரதமர் அறிவிப்பு:**

*1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி அதாவது தீபாவளி தினத்தில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் படுகொலைகள் முடிந்து 18 ஆவது நாளில்,1987.11.09ஆம் திகதியன்று, இந்திய லோக் சபாவில் பிரதமர் ராஜிவ் காந்தி பின்வருமாறு உரையாற்றியிருந்தார்:*

*“புலிகளின் பிணைக் கைதிகளாக இருந்த யாழ்ப்பாணக் குடிமக்கள் மத்தியில் பெரும் உயிரிழப்புகளை ஏற்படுத்தக்கூடிய தந்திரோபாயங்கள் அல்லது ஆயுதங்களைப் பயன்படுத்தவேண்டாம் என்று இந்திய அமைதி காக்கும் படைக்குக் கடுமையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்திய இராணுவம் இந்த வழிமுறை களை மிகச்சிறந்த ஒழுக்கத்துடனும் தைரியத்துடனும், நேர்மையுடனும் நிறைவேற்றி,அதனை ஏற்றுக்கொண்டு தமிழ் பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக உயர்மட்ட தியாகங்களைச் செய்துவருகின்றனர்.”.*

- ***“இந்தியப் படையினர் நேர்மையாகவே செயற்படுகின்றனர்”என இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின்செய்தித்தொடர்பாளர் தி காடியனுக்குத் தெரிவிப்பு:***

*கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் செய்தித் தொடர்பாளர் தி கார்டியன், 19 அக்டோபர் 1987 இல் வெளியான சஞ்சிகையில் தமது ஜவான்களின் நேர்மைத் தன்மையைப் பின்வருமாறு குறிப்பிட்டார்:*

*‘இந்திய அமைதி காக்கும்படை ஒரு கையால் அதன் முதுகுக்குப் பின்னால் கட்டிக் கொண்டு போராடுகிறது. இந்த நடவடிக்கையை புலிகளின் கடுமையான எதிர்ப்புக்களின்கீழ் செய்து வருகிறது. இந்தியாவைப் பொறுத்த வரை தடைகள் இராணுவத்தின் தயக்கத்தை அடிப்படையாகக் கொண்டவை பொதுமக்கள் உயிரிழப்புகளைத் தவிர்ப்பதற்காக விடுதலைப் புலிகள் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டபோதும், எதிர்த்தாக்குதல்களை மேற்கொள்ளாது, அவர்கள் தமது முழுமையான பாதுகாப்பை மக்களுக்கு வழங்குகின்றார்கள். இதனால் முன்னேறும் எமது துருப்புக்களுக்கு விமானப் பாதுகாப்புக்கூட வழங்கப்படமுடியவில்லை. மேலும் எப்போதாவது இருந்துவிட்டு மட்டுமே புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துகின்றனர் “.*

*இந்தியப் பிரதமர் ராஜிவ்காந்தியின் உரைக்குப் பின்னரும்,இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் செய்தித் தொடர்பாளரின்; செய்திகளுக்குப் பின்னரேயே இந்திய இராணுவத்தினரால் யாழ். போதனா வைத்தியசாலைப் படுகொலைகள், கொக்குவில் பிரம்படிப் படுகொலைகள், வல்வைப் படுகொலைகள், வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலைத் தாக்குதல்கள் என மேலும் பல பொதுமக்களின் மீதான இன அழிப்புக்கள் இடம் பெற்றமையானது, இந்திய அரசியல் தலைமைப் பீட்ததிற்கும்,இராணுவத் தலைமைப் பீடத்திற்கும் உள்ள மிகப்பெரிய முரண்பாட்டையும், இடைவெளியையும் கொண்டிருப்பது வெளிப்படையாகவே தெரிந்தது.*

*இத்தகைய படுகொலைகளின் கொடுரங்களைக் கண்டு கொதிப்படைந்த பழ.நெடுமாறன்; தனது “தென்செய்தி” இணையத்தளத்தில்; “சீக்கியர்களிடம் மன்னிப்புக் கேட்ட இநதி;ராகாந்தி போன்று,.ஈழத்தமிழ்மக்களிடம்ராஜிவ்மன்னிப்புக் கேட்பாரா...?” என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் குறிப்பிடப்பட்ட உணர்வுபூர்வமான விடயங்கள், ஒவ்வொரு இந்தியனிடமும் இருந்திருக்குமாயின், அர்ப்பணிப்புடன் போராடி வெற்றியின் விளிம்புக்கு வந்த நேரத்தில் சிறிலங்காவுடன் சேர்ந்து ஏனைய பத்துக்கும் மேற்பட்ட நாடுகளுடனும் கைகோர்த்த இந்தியா தமிழ் மக்களுக்காகப் போராடிய விடுதலைப் புலிகளையும் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பொது மககளையும் அழித்திருக்குமா...?*

*இந்திய அரசினால் ஏற்படுத்தப்பட்ட வல்வைப் படுகொலைகள் உட்பட அனைத்துப் படுகொலைகளுக்கும், சொத்து அழிவுகளுக்குமான தார்மீகப் பொறுப்பை இந்திய அரசு ஏற்று வல்வெட்டித்துறை மக்களிடமும், இலங்கைத் தமிழர்களிடமும் இந்தியா மன்னிப்புக் கோர வேண்டும். அத்துடன் மனித மற்றும் சொத்து அழிவுகளுக்கும், மனஉளைச்சல்களுக்கும் நட்ட ஈடும் வழங்கவேண்டும். அப்பொழுதுதான் இந்தியா, காந்தியின் இந்தியாவாக இருக்கும்....!*

**முற்றும்**

## நான்கு முனைப் ... தொடர்ச்சி ...

*ஜனாதிபதியாக வந்து, பலமான நாடாளுமன்றமும் தமக்கு அமைந்தால் சமஷ்டியைத் தருவேன் என்று சொல்வதை எப்படி நம்புவது?*

*அதேபோலத்தான் சஜித் பிரேமதாசவும். 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு தான் அதிகாரத்துக்கு வந்தால் நடவடிக்கை எடுப்பேன் என்று கூறியிருக்கின்றார். அதேவேளையில், தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது அவர்களுடைய உரிமை என்று சொன்ன சஜித், ஆனால், இவ்வாறு இன ரீதியாக அரசியல் செய்வது இன, மத முரண்பாடுகளை மேலோங்கச் செய்யும் என்றும் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.*

*நாடு முழுவதும் ஆயிரம் விகாரைகளைக் கட்டுவதற்கான திட்டத்தை வகுத்துச் செயற்பட்டவரும் சஜித்தான். இதேபோல, 13 ஆவது திருத்தம் குறித்து ரணில் பேசிய போது, கொந்தளித்த பிக்குகளை கட்டுப்படுத்தாமல் பார்த்துக்கொண்டிருந்தவரும் அவர்தான். சிங் கள வாக்குகளுக்காக முன்னாள் இராணுவ அதிகாரிகள் பலரையும் தனது கட்சியில் இணைத்துக் கொண்ட சஜித், பொறுப்புக் கூறல் போன்ற விடயங்களில் எவ்வாறு செயற்படுவார் என்பது எதிர்பார்க்கக்கூடியதுதான்.*

*தமிழரசுக் கட்சியின் “சிலரை” பயன்படுத்தி தமது பேரங்களை முன்னெடுத்து தமிழ் வாக்குகளை உறுதிப்படுத்தலாம் என்று ரணிலும், சஜித்தும் போட்ட கணக்கு தமிழ்ப் பொது வேட்பாளரால் சிதறடிக்கப்படப் போகின்றதா என்பதுதான் இப்போது அவர்களுக்குள்ள பிரச்சினை. அதனால், சிங்கள வாக்குகளைப் பாதிக்காமல் எந்தளவுக்கு வாக்குறுதிகளைக் கொடுக்கலாம் என்பதற்கான உபாயங்களைத்தான் இப்போது அவர்கள் வகுக்கின்றார்கள்!*

• • •

## முற்போக்கு ... தொடர்ச்சி ...

*மோசடி, அரசு வங்கிகளில் பெற்ற கடன்களைத் திருப்பியளிக்காமல் முதலாளிகள் செய்யும் மோசடிகளைத்தான் முற்போக்கு முதலாளித்துவம் என்று ஸ்டிக்லிட்சு குறிப்பிடுகிறார்.*

*இந்தியாவில் நடைமுறையில் நாம் காண்பது மோசடி முதலாளித்துவம்.*

*ஒரு வேளை மோசடி முதலாளித்துவத்தைத் தான் முற்போக்கு முதலாளித்துவம் என்று ஸ்டிக்கிலிசு கூறுகிறாரா?*

*ஒன்று மட்டும் உண்மை- 2024 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் கடன் அளவு நாட்டு ஒட்டு மொத்த வருமானத்தை விட 100 விழுக்காடு கடந்து விட்டது.*

*கடன் மட்டும் பெருகவில்லை விலை உயர்வு, வேலையின்மை, மக்களிடம் வருமான, செல்வ ஏற்றத் தாழ்வு ஆகியன பெருகி, அமெரிக்கப் பொருளாதாரம் 1930களில் ஏற்பட்ட பெரும் வீழ்ச்சியைச் சந்தித்து வருகிறது. இத்தகைய போக்கினையும் முற்போக்கு முதலாளித்துவம் என்று ஸ்டிக்கிலிசு அழைப்பாரா?*

• • •

## தமிழ்ப்பொது ... தொடர்ச்சி ...

*புலம்பெயர் தமிழர்களும் பல அமைப்புக்களாக செயற்பட்டு வருகிறார்கள். வடக்கு கிழக்கு இணைந்த ஒரு தீர்வு வர வேண்டும். ஒரு சுய நிர்ணய உரிமை கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் செயற் படுகின்றனர், அவர்களின் கனவுகளும் கூட ஈழத்தமிழருக்கு ஒரு விடிவு வர வேண்டும், மக்கள் நிம்மதியாக இருக்க வேண்டும் என்பதுதான். அதற்காக அவர்கள் புலம்பெயர் தேசங்களில் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை செய்துகொண்டு இருக்கின்றார்கள். ஈழத்தமிழர்களுக்கு பல இன்னல்கள் வரும்போது கூட அவர்கள்தான் பல உதவிகளை செய்துகொண்டு இருக்கின்றனர். ஆனால் அவர்கள் பயணிக்கின்ற பாதைகள் தான் பல்வேறு விதமாகஇருக்கின்றது. ஆனாலும் அவர்களின் நோக்கம் ஒன்றாகத்தான் இருக் கின்றது.*

*அதோடு புலம்பெயர் தேசங்களில் அவர்கள் முன்னெடுக்கின்ற அரசியல் பணிகளில் ஈழத்தமிழரின் ஒற்றுமையைக் காட்ட வேண்டிய தேவையும் அவர்களுக்கு இருக்கின்றது.*

*ஆகவே நிச்சமாக புலம்பெயர்ந்த மக்கள் என்ன செய்ய வேண்டும் என்றால், பொது வேட்பாளர் குறித்து எதிர்கால நன்மைகள் தொடர்பாக வடக்கு கிழக்கு மலையக மக்களுக்கு விழிப்புணர்வுகளை ஊட்டி வாக்களிக்க வழி செய்ய வேண்டும். அப்போது தான் சிறுபான்மை மற்றும் தமிழ் பேசும் மக்களின் எதிர்கால கொள்கைகளை வெற்றியடைச் செய்யலாம். மேலும் தமிழ்ப்பொது வேட்பாளருக்கு வாக்களிப்பதன் மூலம் தமிழருக்கான ஒரு தீர்வை நோக்கிச் செல்ல முடியும் என்ற செய்தியையும் தெளிவு படுத்த வேண்டும் என்பதுதான் என் வேண்டுகோள்.*

### மலையக மக்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?

*மலையக மக்களைப்பொறுத்தமட்டில், இலங்கை தமிழரசுக்கட்சியை தந்தை செல்வா உருவாக்கியதில் இருந்து தொடர்ச்சியாக மலையக மக்களுக்கு குரல் கொடுத்து வந்திருக்கின்றது. அதே போல் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளும் அவர்கள் இன்னல்களைச்சந்திக்கும் போது தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருகின்றனர். மேலும் தொண்டமான் அவர்களும் தந்தை செல்வாவுடன் இணைந்து பல வேலைத்திட்டங்களைச் செய்தார். வடக்கு கிழக்கு மக்களுக்காகவும் துணிந்து குரல் கொடுத்தார். ஆகவே மலையக மக்களையும் அரவணைத்து செல்ல வேண்டும். அவர்களின் உரிமைகளுக்காகவும் நாம் குரல் கொடுக்க வேண்டும். ஆனால் எங்களுக்கு வாக்களியுங்கள் என்று மலையக மக்களை நாம் கோர முடியாது. அவர்களுக்கும் தனித்துவம் உள்ளது. தனித்துவமான அரசியல் கட்சிகள் இருக்கின்றன. ஆகவே அந்தக்கட்சிகளைப் புறந்தள்ளிவிட்டு எமக்கு வாகளிக்க வேண்டும் என்று வலியுறுத்த முடியாது. விரும்பினால், ‘எங்களுக்காக அவர்கள் குரல் கொடுப்பார்கள்’ என்ற நம்பிக்கை இருந்தால், நிச்சயமாக அவர்களும் எமக்கு வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.*

• • •

## வாக்குகளை ... தொடர்ச்சி ...

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்திருந்தது. பெருந்தோட்டத் தொழிலாளர்களையும் உள்ளடக்கிய மலையக தமிழ் சமூகத்தை அங்கீகரித்தல், பெருந்தோட்ட சமூகத்தின் மேம்பாட்டுக்கான விசேட ஜனாதிபதி செயலணியை நிறுவுதல், மத்திய, சப்ரகமுவ, ஊவா மற்றும் மேல் மாகாணங்களை உள்ளடக்கியதாக மலையகத்தில் 10 தேசிய பாடசாலைகளை கணித, விஞ்ஞான உயர்தரப் பிரிவுகளுடன் கூடியதாக நிறுவுவதற்கும், நுவரெலியா மாவட்டத்தில் மலையக பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுத்தல், பெருந்தோட்ட பிரதேசங்களில் பரம்பரையாக வாழும் சட்டவதிவுடையோருக்கும்,அதனை அண்மித்து நகரங்கள் குடியிருப்புக்களில் வாழுகின்ற நிலமற்ற ஒவ்வொரு குடும்பமும் சொந்த நிலத்தையும், வீடற்ற ஒவ்வொரு குடும்பமும் வீடொன்றை பெறுவதையும் உறுதி செய்தல், இளைஞர் யுவதிகளின் தொழில் வாய்ப்புக்களை உறுதிசெய்யும் வகையில் மலையகத்தில் கைத்தொழில் வலயங்களையும், அதனோடு இணைந்த தொழிற்பயிற்சி நிலையங்களையும் அமைத்தல் என்பவற்றோடு சுகாதாரம், பொதுநிர்வாகம் , கல்வி உள்ளிட்ட மேலும் பல விடயங்களும் இதில் உள்ளீர்க்கப்பட்டிருந்தன.

இதேவேளை சஜித் பிரேமதாசா 'ஒன்றாய் முன்னோக்கி' என்ற தனது கொள்கைப் பிரகடனத்தில் தொழிலாளர்களின் நாளாந்த வருமானத்தை 1500 ரூபா வரை உயர்வடைய நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாகவும், அதற்காக மேலதிக வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியுமான கால்நடை வளர்ப்பு மற்றும் மாற்றுப் பயிர்ச்செய்கைகள் போன்ற புதிய துறைகள் மீது தோட்டத் தொழிலாளர்கள் நாட்டம் கொள்ளக்கூடிய வகையில் கூட்டு ஒப்பந்தத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பெருந்தோட்ட கல்வி மற்றும் சுகாதார வசதி, தேசிய பாடசாலைகள், பல்கலைக்கழகத்தினை நிறுவுதல் என்பன தொடர்பில் சாதகமான வெளிப்பாடுகளை வழங்கி இருந்தார். மேலும் இம்முறை தேர்தலில் மலையக மக்கள் குறித்து அவர் வழங்கியுள்ள வாக்குறுதிகளில் வீட்டுக்கான காணி உரிமத்தைக் கொண்ட சிறுதோட்ட உரிமையாளர்களாக பெருந்தோட்டத் தொழிலாளர்களை உருவாக்குவதே தமது நோக்கமாகும் என்று அழுத்தமாகக் கூறி இருக்கின்றார். தோட்டச் சமூகத்தின் வேலையற்ற இளைஞர்களுக்கு நிலவுரிமை, மூலதன உரிமை, விவசாயம் செய்யும் உரிமை, தரிசு நிலம் என்பவற்றை வழங்க வேண்டும் என்றும் சஜித் தெரிவித்துள்ளார்.

### 48 அம்ச கோரிக்கை

இந்நிலையில் இம்முறை ஜனாதிபதி தேர்தலில் 48 அம்ச நிபந்தனைகளுடன் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவுக்கு தமிழ் முற்போக்கு கூட்டணி முழுமையான ஆதரவை வழங்க தீர்மானித்துள்ளது. 7 அத்தியாயங்களைக் கொண்டு 48 அம்சங்களை உள்ளடக்கிய புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு சஜித் பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்த நிலையிலேயே தமிழ் முற்போக்கு கூட்டணி சஜித்திற்கான ஆதரவை உறுதிப்படுத்தியுள்ளது. அத்தோடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மலையக மக்கள் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு மலையக மக்கள் ஆற்றி வரும் பங்களிப்பை மெச்சியுள்ளதோடு இம் மக்களின் நலன் கருதி காத்திரமான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவித்திருக்கின்றார். மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைத்தல், அரசியல், பொருளாதார, சமூக உரிமைகளை வழங்குதல், வீடமைப்பிற்கான காணிகளை பெற்றுக் கொடுத்தல் எனப்பலவும் இதில் உள்ளடங்குகின்றன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நீண்ட காலமாகவே தோட்டங்களை கிராமங்களாக மாற்ற வேண்டியதன் அவசியம் தொடர்பில் வலியுறுத்தி வருகின்றது. எனினும் தோட்டப் புறங்களில் உள்ள லயன் வீடுகளை அப்படியே வைத்துக் கொண்டு கிராமங்களாக மாற்றப்போவது தொடர்பில் எதிர்க்கட்சிகள் பல்வேறு விமர்சனங்களையும் முன்வைத்து வருகின்றன. மேலும் தோட்டப் பகுதிகளில் தனிவீட்டுக் கலாசாரத்தை துரிதமாக முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் இக்கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

பெரும்பான்மை கட்சிகளும், அரசியல்வாதிகளும் தேர்தல் வெற்றியை மையப்படுத்தி கூறும் வாக்குறுதிகள் தேர்தல் முடிந்த கையோடு காற்றில் பறந்து விடும் போக்குகளே அதிகமாகக் காணப்படுகின்றன. இந்நிலை மாற்றப்படுதல் வேண்டும். அத்தோடு வாக்காளர்கள் கடந்தகால அனுபவங்களை கருத்தில் கொண்டு அதற்கேற்ப புத்திசாலித்தனமான முறையில் உரிய வேட்பாளருக்கு ஆதரவு வழங்கி ஜனாதிபதியாக தெரிவு செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

• • •

## ரஸ்யாவுடன் ... தொடர்ச்சி ...

முதலாவது இரண்டு பிரிவுகளும் 2013 மற்றும் 2016 ஆம் ஆண்டு களில் கட்டப்பட்டன. அதன் பின்னர் மேலும் இரண்டு பிரிவுகள் கட்டப்பட்டு வருகின்றன. தற் போது மேலும் இரண்டு பிரிவுகளை கட்டுவதற்கு இந்தியா ரஸ்யாவின் உதவியை நாடியுள்ளது. இதன் மூலம் 6,000 மின்சாரத்தை உற்பத்தி செய்யமுடியும்.

ரஸ்யாவின் Rosatom என்ற நிறுவனம் இந்தியாவுக்கு தேவையான அணுசக்தி எரிபொருட்கள் மற்றும் தொழில்நுட்பத்தை வழங்கவுள்ளது. அதற்கான பேச்சுக்களை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் கடந்த டிசம்பர் மாதம் ரஸ்யாவுக்கு சென்றபோது மேற்கொண்டிருந்ததாக அந்த ஊடகம் தனது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளது.

## மீண்டும் ஐரோ ... தொடர்ச்சி ...

தனர். 41 விகித மக்கள் எதிராக கருத்து தெரிவித்திருந்தனர். ஐரோப்பிய ஒன்றியத்துடன் நெருக்கமான உறவுகளை பேணுவதை தாம் விரும்புவதாகவும், ஆனால் மீண் டும் அதனுடன் இணைவதை விரும்பவில்லை எனவும் 60 விகித மக்கள் தமது கருத்தை தெரிவித்துள்ளனர்.

ஆனால் இந்த கருத்தை 17 விகிதமானவர்கள் எதிர்த்துள்ளதுடன், 20 விகிதமானவர்கள் அது தொடர்பில் கருத்துக்களை கூற மறுத்துவிட்டனர். மேலும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா விலகியது தவறான முடிவு என 55 விகிதமானவர்களும், விலகியது சரி என 34 விகிதமானவர்களும் கருத்து தெரிவித்துள்ளனர். இதனிடையே பிரித்தானியாவில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தொழிற்கட்சி மிகப்பெரும் வெற்றியை ஈட்டியபோதும் ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரித்தானியா மீண்டும் இணை யாது என புதிய பிரதமர் கியர் ஸ்ராமர் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் நெரு ... தொடர்ச்சி ...

கின்றேன். அவர்கள் தமக்கான நேரம் வருவதற்காகக் காத்துக்கொண்டிருக்கின்றார்கள்.

**தமிழரசுக் கட்சியின் ஒரு பிரிவினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் இந்தப் பொது வேட்பாளர் என்ற கருத்துக்கு முரணான பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றார்கள். இது பொது வேட்பாளர் என்ற உங்களுடைய முயற்சிகளைப் பாதிக்குமா?**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பொறுத்தவரை ஜனாதிபதித் தேர்தல்களைப் பகிஷ்கரிப்பது என்ற கொள்கையைத்தான் கடந்த தேர்தல்களின் போதும் வெளிப்படுத்தியிருந்தார்கள். ஆனால், அந்த விடயம் தமிழர்கள் மத்தியில் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான வாய்ப்பு குறைவு. ஏனெனில், நாம் ஒரு விடயத்தைச் சொல்லும் போது, அதன் அடுத்த கட்டம், அதன் தொடர் விளைவுகள் என பல விடயங்களை சொல்ல வேண்டும். பகிஷ்கரிப்பு என்றால் அடுத்தது என்ன? அதன் விளைவு என்ன? அந்த விளைவை எவ்வாறு கையாளப் போகின்றோம்? இவை எதற்கும் பதில் இல்லாமல், வெறுமனே பகிஷ்கரிப்பு என்று தமிழ் மக்களை அடுத்த கட்டத்துக்கு அழைத்துச்செல்ல முடியாது!

ஆனால், தமிழரசுக் கட்சி இவ்விடயத்தில் குழப்பமடைந்திருக்கின்றது. கட்சியை எப்படி கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது என்பது தெரியாமல் தடுமாறிக்கொண்டிருக்கின்றார்கள். இதன் விளைவு இன்று தெரியாது. அடுத்து வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் எவ்வாறான முடிவை எடுப்பார்கள் என்பதை அவர்கள் அறிவார்கள். மககளிடமிருந்து அவர்கள் அந்நியப்பட்டுப் போகும் நிலைதான் இருக்கின்றது. ஆனால், தமிழரசுக் கட்சியின் பெரும்பாலானவர்கள் தேர்தல் நெருங்கும் போது வழிக்கு வருவார்கள்.



## உக்ரைனின் ... தொடர்ச்சி ...

ரஸ்ய படையினரால் உடனடியான பதில் தாக்குதலை மேற்கொள்ள முடியாத நிலையை ஏற்பட்டிருந்தது.

தற்போது ரஸ்ய படையினர் உக்ரைன் படையினரின் தொடர் நகர்வை நிறுத்துவதுடன், அவர்களின் வினியோக வழிகளை தடுப்பதையே முதன்மையான நகர்வாக கொண்டுள்ளனர்.

இரு தினங்களாக இந்த தாக்குதல் குறித்து எதனையும் கூறாது உக்ரைன் அமைதியாகவே இருந்தது. உக்ரைனின் சமூகவலைத் தளங்கள் ரஸ்யாவின் தகவல்களைத் தான் வெளியிட்டுவந்தன. இந்த ஊடறுப்பு தாக்குதல் தொடர்பில் முதலாவது அறிவித்தலை உக்ரைன் ஆகஸ்ட் 8 நாள் தான் வெளியிட்டது. உக்ரைன் அதிபரின் ஆலோசகர் மிகெயில் பொடோலிக் ரஸ்யாவுக்குள் தமது படையினர் ஊடுருவியுள்ளதாக தெரிவித்திருந்தார்.

எத்தனை உக்ரைன் படையினர் களமிறங்கியுள்ளனர் என்பது தொடர்பில் மேற்குலக ஊடகங்களே தகவல்களை வெளியிட்டு வருகின்றன. 6000 தொடக்கம் 10000 படையினர் என பிரித்தானியாவின் த ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்திருந்தது. 22ஆவது மற்றும் 88ஆவது கவசப்படையணிகள் மற்றும் 80ஆவது வான் தாக்குதல் படையணி போன்ற உக்ரைனின் மிகச்சிறந்த படையணிகள் இந்த நடவடிக்கையில் பங்குபற்றியதாக போபீஸ் ஊடகம் தெரிவித்துள்ளது.

அதாவது இங்கு குறிப்பிடப்படும் தாக்குதல் படையினரின் எண்ணிக்கை என்பது நடவடிக்கையில் ஈடுபடும் மொத்த படையினரின் எண்ணிக்கையில் 15 தொடக்கம் 20 விகிதமாகும். மிகுதிப்படையினர் கைப்பற்றப்பட்ட இடங்களை பாதுகாப்பது, வினியோகங்களை மேற்கொள்வது, பீரங்கிப் தாக்குதல் நடத்துவது ஆளில்லாத தாக்குதல் விமானங்களை இயக்குவது போன்ற நடவடிக்கையில் ஈடுபடுவதுண்டு.

சுமி பிரதேசத்தில் உள்ள பின்னிருக்கை தளத்தில் இருக்கும் படையினர் இழப்பீடுகளை ஈடுசெய்வதற்காக வைக்கப்பட்டிருந்தனர்.

எனினும் சுட்சா பகுதியில் காஸ்போரம் நிறுவனத்தின் எரிவாயு வினியோக மையத்தில் இருந்து உக்ரைன் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கு வினியோகம் செய்யும் எரிபொருள் வினியோக நடவடிக்கை தடங்கலின்றி தொடர்கின்றது.

அதேசமயம், உக்ரைன் அதிபர் செலன்ஸ்கி ஏன் தற்போது இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார் என மேற்குலக ஊடகங்கள் அனுமானங்களை வெளியிட்டுவருகின்றன. பெயர் தெரியாத நகரத்துக்காக ஏன் படையினரை பலி கொடுக்கின்றார்? டொன்பாஸ் பகுதியில் தான் பிரதான போர் இடம்பெற்றுவருகின்றது. அங்கு ரஸ்ய படையினர் உறுதியாக முன்நகர்ந்து வருகின்றனர். அதனை தடுக்கமுடியாது திணறுகின்றது உக்ரைன்.

அதற்குஉக்ரைனுக்குசிறப்புபணிற்சிபெற்ற புதிய படையணிகள் தேவை. கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட ஊடறுப்பு தாக்குதலும் தோல்வியில் தான் முடிவடைந்திருந்தது. தற்போது உக்ரைன் படையினர் முழுமையான தோல்வியைத் தழுவும் நிலையில் தான் உள்ளனர்.

எனவே தற்போதைய ஊடறுப்பு தாக்குதல் தோல்வியில் முடிந்தால் செலன்ஸ்கியின் வீழ்ச்சிக்கு அது வழிவகுக்கும். உக்ரைன் தனது பிரதேசத்தை ரஸ்யாவிடம் இழந்து தோல்வியை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு செல்லலாம்.

2022 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கை தான் உக்ரைன் வெற்றிகரமாக நடத்திய தாக்குதல் அதனை ஒத்த நடவடிக்கையை மீண்டும் மேற்கொள்ள தற்போது முனைந்து நிற்கின்றது. ஆனால் அதற்கு களமுனை சாதகமாக இருக்க வேண்டும்.

நாம் தற்போது ஒரு போரை தூண்டும் நிலையை அடைந்துள்ளோம். கடந்த இரண்டரை வருடங்களாக 1000 கி.மீ எல்லைப்பகுதி அமைதியாக இருந்தது என்பது எழுந்தமானமாக நடந்தது அல்ல. ரஸ்யாவின் எல்லைக்குள் தாக்குதல் நடத்தக்கூடாது என்பது அமெரிக்காவுக்கும் ரஸ்யாவுக்கும் இடையிலான உடன்பாடு.

இருந்தபோதும் பெல்குரூட், பிரியன்ஸ்க் மற்றும் கேர்க்ஸ் பகுதிகளில் சிறு சிறு ஊடறுப்பு தாக்குதல்களை உக்ரைன் மேற்கொண்டே வந்திருந்தது. அதாவது மேற்குலகத்தின் எல்கை; கோடுகளை உக்ரைன் பல தடவைகள் மீறுவதற்கு முற்பட்டிருந்தது. அதன்மூலம் தமது படையினருக்கு ரஸ்யா மீது தாக்குதல் நடத்து வதற்கு அச்சமில்லை என்பதை உக்ரைன் காண்பிக்க முனைந்திருந்தது.

அதேபோலவே தற்போது தாம் ரஸ்யாவின் எல்லைக்குள் சென்று தாக்குதல் நடத்தும் வலுவுடன் இருக்கின்றோம் அதற்கு ஆதரவளிப்பது என்பது உங்களின் விரும்பம் என்ற செய்தி அமெரிக்க அதிபர் ஜோ பைடனுக்கு அல் லாது துணை அதிபரும் தற்போதைய அரச தலைவர் வேட்பாளருமான கமலா ஹரிசுக்கும் தெரிவித்துள்ளது உக்ரைன்.

இந்த நடவடிக்கையில் உக்ரைன் பகுதியாக வெற்றிபெற்றாலும், அதாவது ஒரு நகரத்தை தக்கவைத்தாலும் உக்ரைன் வெசிங்டனுடன் ஒரு பேரம்பேசும் நிலையை ஏற்படுத்தலாம். இந்த தாக்குதல் தோல்வியில் முடிந்தாலும் ரஸ்யாவுக்கு சென்று தாக்குதல் நடத்தினோம் என உக்ரைன் தனக்கு பிரச்சாரமாக இந்த தாக்குதலை பயன் படுத்தலாம்.

இந்த தாக்குதல் என்பது ரஸ்ய அதிபர் விளமிடீர் பூட்டின் பலவீனமானவர் என்பதை காண்பிப்பதற்கும் ரஸ்யா அவசரமாக தவறான முடிவுகளை எடுப்பதற்கு தூண்டவும் உக்ரைனுக்கு உதவலாம்.

அதாவது இது இரு நாடுகளுக்கும் இடையிலான தற்போதைய சமரை ஒரு முழு அளவிலான போராக மாற்றலாம். இந்த போரில் யார் தமது வளங்களை முதலில் இழக்கின்றனர் என்பதே வெற்றி தோல்வியை தீர்மானிப்பதாக இருக்கும்.

போர் ஆரம்பமாகியபோது எதிர்கொண்ட நெருக்கடிகளில் இருந்து ரஸ்யா மீண்டெழுந்துள்ளது. அது தனது மொத்த உற்பத்தியில் 7 விகிதத்தை போருக்கு பயன்படுத்துகின்றது. இந்த அணுகுமுறை நீண்டகாலத்திற்கு போரை நடத்துவதற்கு ஏதுவானது. ஆனால் படையினரை திரட்டுவதில் சவால்களை ரஸ்யா எதிர்கொள்ளலாம் ஆனால் உக்ரைனை விட ரஸ்யாவுக்கு அதில் பிரச்சனைகள் இருக்கப்போவதில்லை.

ஏனெனில் உக்ரைனைவிட்டு இளைஞர்கள் தப்பியோடுவதால் அவர்களுக்கு படையினரை திரட்டுவதில் மிகுந்த சிரமங்கள் உள்ளன.

அதேசமயம், தற்போதைய நிலை உக்ரைனின் மொத்த வீழ்ச்சிக்கு வழிவகுக்கலாம். ஏனெனில் ரஸ்ய தனது சிறப்பு நடவடிக்கையில் தான் கவனம் செலுத்தி வருகின்றது. கேர்க்ஸ் பகுதி மீதான ஊடறுப்பு தாக்குதலில் தனது கவனத்தை சிதற அது அனுமதிக்கவில்லை. அதாவது உக்ரைனின் நிகழ்ச்சி நிரலின்படி போர் செய்ய அது விரும்பவில்லை.

இருந்தபோதும் நிலமை இலகுவானதல்ல, எதிரியின் நடவடிக்கையை மொஸ்கோ புறக்கணிக்க முடியாது. இது ஒரு அரசியல் பின்னடைவல்ல படைத்துறை சார்ந்தது. சுட்சா பகுதி மீதான நடவடிக்கை என்பது 1000 கி.மீ நீளமான முன்னரங்குகளின் பாதுகாப்பு நிலைகளின் தன்மையை மீளாய்வு செய்யவேண்டிய நிலையை ரஸ்யாவுக்கு ஏற்படுத்தலாம். ஏனினெனில் எங்கும் இவ்வாறான தாக்குதல் நிகழலாம்.

ரஸ்யாவின் பதில் நடவடிக்கை மூலோபாயம் என்பது உடனடியாக மிகப்பெரும் தாக்குதல் அல்ல. 2022 ஆம் ஆண்டு முதல் அது தன்னிடம் உள்ள வளங்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பயன்படுத்தியே நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது. அதாவது புதிய எல்லைகளை பாதுகாப்பதற்கு ரஸ்யாவிடம் வேறு ஒரு இராணுவம் இல்லை.

**எனவே அடுத்து என்ன நிகழப்போகின்றது? மூன்று தெரிவுகள் உள்ளன.**

ஒன்று ரஸ்யா ஒரு சிறப்பு தாக்குதல் படையணியை தயார் செய்து உக்ரைனுக்குள் ஊடறுப்பு தாக்குதலை நடத்தலாம். அதாவது சுமிப் பகுதியில் இரண்டாவது களமுனை ஒன்றை திறக்கலாம். அதன் மூலம் கார்கோவில் மேற்கொண்டது போல ஒரு யுத்தசூனியப் பகுதியை ஏற்படுத்தலாம். இது மிகவும் கடுமையான தெரிவு. கேர்க்ஸ் பகுதியை மட்டும் மீட்காது அதற்கும் மேல் சென்று உக்ரைனுக்கு சிறந்த பதிலடியை கொடுக்கலாம். ஆனால் மேதிலக படையினரை சேர்க்காது புதிய களமுனையை தக்கவைக்க முடியாது.

இரண்டாவது உக்ரைனிடம் சிறப்பு பயிற்சி பெற்ற படையணிகள் இருக்குமாயின் அவர்கள் மற்றுமொரு களமுனையை திறக்கலாம் அது ரஸ்யாவின் தற்போதைய நகர்வை பாதிக்கலாம். அதன் மூலம் உக்ரைன் தனது அரசியல் நலன்களை அடையலாம்.

ஆனால் உக்ரைனிடம் அவ்வாறான பிரிகேட்டுக்கள் இருப்பதற்கான ஆதாரங்கள் இல்லை. உக்ரைனிடம் இருந்த சிறப்பு பயிற்சிபெற்ற 3 பிரிகேட் படையினரே தற்போதை மோல்களில் ஈடுபடுவதாக மேற்குலக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. எனவே இந்த படையணிகளை ரஸ்யா அழிக்குமாக இருந்தால் அது ரஸ்யாவின் போரை இலகுவாக்கும்.

மூன்றாவதாக, தற்போது கேர்க்ஸ் பகுதிக்குள் நுளைந்துள்ள உக்ரைன் படையினரை அழித்துவிடுவதுடன், தமது எல்லைகளை பலப்படுத்துவதன் ஊடாக தற்போதைய படை நடவடிக்கையை பாதிப்பின்றி தொடரலாம்.

ஆனால் தற்போது எல்லைப் பகுதி கள் தாக்குதல் களங்களாக மாறியுள்ளன. எல்லைக் கோடுகளை கடந்து சென்று தாக்கும் உக்ரைன் பகுதியாக வெற்றி பெற்றுள்ளது. ஆனால் ரஸ்யா டொன்பாஸ் பகுதியில் உள்ள தனது படையினரை இந்த களமுனைக்கு நகர்த்த விரும்பவில்லை. அதாவது கேர்க்ஸ் பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் போரிடுகின்றது. எனவே சுட்சா மற்றும் கேர்க்ஸ் பகுதிகளில் இடம்பெறும் மோல்கள் முடிவக்குவர நாள் செல்லலாம்.

இதில் எது நடக்கும் என்பதை நாம் விரைவில் பார்க்கலாம்.

• • •

## அயோத்தியில் ... தொடர்ச்சி ...

திருடப்பட்ட மின்குமிழ்களின் பெறுமதி 50 இலட்சம் ரூபாய்கள் என மதிப்பிடப் பட்டிருக்கின்றது. இந்த ஆலயத்தின் திறப்பு விழாவில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி பங்குபற்றியிருந் தார். அவரின் வருகைக்காக இந்த நகர் புனித நகராக பிரகடனப் படுத்தப்பட்டதுடன், மின்குமிழ்கள் மூலம் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அயோத்தி நகரத்தின் அபிவிருத்திக்காக இந்திய அரசு 3.85 பில்லியன் டொலர்களை ஒதுக்கியிருந்தது. அதில்216மில்லியன்டொலர்கள் செலவில் ஆலயம் அமைக்கப்பட்டிருந்தது. இந்த ஆலயத்தின் திறப்பு விழாவில் ஆரசியல்வாதிகள், வர்த்தகர்கள், சினிமாத்துறையினர் என 8,000 பேர் கலந்துகொண்டிருந்தனனர்.

அயோத்தி பகுதியில் ஐந்து நூற்றாண்டுகளாக இருந்த பாபர் மசூதி என்ற பள்ளிவாசலை இந்து தேசியவாதிகளும், இந்திய அரசும் இணைந்து 1992 ஆம் ஆண்டு இடித்து அழித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவிற்கு ... தொடர்ச்சி ...

கவனயீர்ப்பில் ஈடுபட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் ராசிக் ரியாஸ்தீன் தெரிவித்தார்.

குறித்த முத்து நகர் மற்றும் கப்பல் துறை பகுதிகளில் மக்கள் 1972ம் ஆண்டு பிரதமராக செயற்பட்ட ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்களால் குடியேற்றம் செய்யப்பட்டிருந்தது. விவசாயத்தை நம்பி வாழும் மக்களை தற்போது மீள் எழுப்பி இந்தியாவுக்கு மின்சார காற்றாலை உற்பத்திக்கு நீண்ட கால குத்தகைக்கு வழங்குவது மக்களை நசுக்கும் செயலாகும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மாவட்ட அமைப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## இனப்படு ... தொடர்ச்சி ...

மேற்கொள்ளப்படும் தலையீடுகளால் நாம் ஒரு போதும் பின் வாங்க மாட்டோம். தமிழினப் படுகொலை தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய குற்றவாளிகளை இலங்கை அரசாங்கம் ஹேக் நகரிலுள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் கையளிக்கும் வரை உண்மையான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பமுடியாது. இருப்பினும் இப்போர்க் குற்றவாளிகளை அவர்கள் இழைத்த மனித குலத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறச்செய்வதற்குப் பதிலாக, இலங்கை அரசாங்கம் அவர்களைப் பாதுகாத்து வருகின்றது' என விசனம் வெளியிட்டிருந்தார்.

இந்த சூழலில், கனடா தூதுவரை அழைத்து இலங்கை தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

அதே நேரம் கனடா அரசாங்கத்தினால் அண்மையில் புதுப்பிக்கப்பட்ட தடைசெய்யப் பட்ட அமைப்புக்கள் அடங்கிய பட்டியலில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மீளவும் உள்ளடக்கப்பட்டிருப்பது குறித்து இலங்கை அரசாங்கம் வரவேற்பு வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒலிம்பிக் ... தொடர்ச்சி ...

களில் சுமார் 329 பிரிவுகளுக்கான போட்டி நடைபெற்ற முடிந்தது.

பதக்க பட்டியலில் அமெரி க்கா 40 தங்கம், 44 வெள்ளி, 42 வெண் கலத்துடன் 126 பதக்கங்களு டன் முதலிடத்தில் நிறைவு செய்தது. சீனா 40 தங்கம், 27 வெள்ளி 24 வெண்கலம் என 91 பதக்கத்துடன் இரண்டாவது இடத்தை பிடித்தது. ஜப்பான் 20 தங்கம், 12 வெள்ளி, 13 வெண்கலத்துடன் 45 பதக்கத்துடன் மூன்றாவது இடத்தை நிறைவு செய்தது. இதில் இந்தியாவிலிருந்து 117 வீரர் வீராங்கனைகள் பங்கேற்று ஆறு பதக்கங்களை கைப்பற்றினர். இதன் மூலம் பதக்கப் பட்டியலில் இந்தியா 71 வது இடத்தை நிறைவு செய்தது.

நிறைவு விழாவில் ஒவ்வொரு நாடும் தங்களது கொடிகளை ஏந்தி வீரர்கள் ரசிகர்களிடம் பிரியாவிடை பெற்றனர்.

இந்த நிறைவு விழாவில் போட்டியை நடந்துமுடிக்கஉதவியசுமார்40ஆயிரம்மேற்பட்ட தன்னார்வலர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. இதனை அடுத்து 2028 ஆம் ஆண்டு ஒலிம்பிக் அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சலஸ் நகரில் நடைபெற தேர்வு செய்யப்பட்டதை அடுத்து ஒலிம்பிக் கொடி லாஸ் ஏஞ்சலஸ் மேயர் கெரன் பாஸிடம் கைமாற்றப்பட்டது.

இந்த நிறைவு விழாவில் பிரபல பாடகர்கள் பில்லி எலிஸ், ஸ்னூப் டாக் மற்றும் ரெட் ஹார்ட் சில்லி பேப்பர் குழுவினர் தங்களது இசை நிகழ்ச்சியை நடத்தினர். தொடக்க நிகழ்ச்சி செயின் ஆற்றில் நடத்தப்பட்ட நிலையில் நிறைவு விழா மைதானத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

## குமரி கண்ட ... தொடர்ச்சி ...

ஒரு படைப்பாளி என்பவன் சமூகத்தின் கண்ணாடியாகத் திகழ வேண்டும் என்பதை மதீசன் மீண்டும் தன் இசைப் படையணியோடு மெய்ப்பித்திருக்கின்றார்.

இசையமைப்பாளர் மதீசனுக்கும்,, "குமரி கண்ட குமரன்" இசை ஆக்கத்தில் பங்கெடுத்த அனைத்துக் கலைஞர்களுக்கும் வாழ்த்துகள்.

## மக்கள் எழுச்சி ... தொடர்ச்சி ...

வீழ்ச்சியே. இந்தியாவானது பங்களாதேஷின் துறைமுகம்/ரயில்கள் முதலானவற்றை இந்தியாவையும் பங்களாதேஷையும் சூறையாடும் இந்தியப் பெருமுதலாளிகள் இலவசமாக பயன்படுத்திக்கொள்ளும்வகையில்ஒப்பந்தம்கையொப்பம் ஆகியிருக்கிறது. தவிர *அதானியின் குழுமம் ஜார்கண்டில் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை முழுவதுமாக பங்களாதேஷுக்குத்தான் சப்ளை செய்யப்படுகிறது.

*டாடா, ஏர்டெல், டிவிஎஸ் போன்ற குழுமங்களின் முதலீடும் பங்களாதேஷில் குவிந்து கிடக்கிறது. அதனால்தான் ஹஸீனா கட்டின துணியோடு இந்தியாவுக்கு ஓடிவந்தார். இந்தியாவும் தனது ஏஜெண்ட்டுக்கு அடைக்கலம் கொடுத்தது.

பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கம் ஹஸீனாவுக்கு எதிராக இரு வழக்குகளை தொடுத்திருக்கிறது. ஹஸீனா அவற்றில் ஆஜராவதற்கு இந்தியாவிடம் நாடு கடத்துமாறு கோரினால் இந்தியாவின் இலட்சணம் அம்பலமாகிவிடும்.

அடுத்ததாக இந்திய எதிர்ப்பிலான பங்களாதேஷ் ஆளும் வர்க்க கட்சியான பங்களாதேஷ் தேசிய கட்சியை(BNP) ஆதரிப்போர் மேற்காண் ஆலோசனைக் குழுவில் உறுப்பினர்களாகவும் இருக்கின்றனர்.

இந்தியாவானது மேற்காண் காரணங்களால் தனது பழக்கடை பறிபோகிறதே என்று அமெரிக்காவை குற்றம் சாட்டுகிறது ஆர்எஸ்எஸ் ஆதரவு வலைத்தளத்தில். பங்களாதேஷ் மக்களுக்கு போராட்ட உணர்வு இல்லாததுபோல். சொல்லப்போனால் ஆட்சி மாற்றத்தை சாதித்த மேற்காண் மாணவர் அமைப்பினரும் இடைக்கால அரசாங்கமும் மதச் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு வழங்குவதைப் போல மோடியின் இந்துத்துவப் பாசிச ஆட்சியாளர்களும் இந்தியாவில் உள்ள மதச் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பை வழங்க வேண்டும். இந்தியாவின் மக்களும் பங்களாதேஷ் மக்களின் இப்போராட்ட அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்டு செயற்பட்டால் இக்கட்டுரையின் தொடக்கத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கான விடை அறியவரும்.

• • •

## ஊடகத்துறை ... தொடர்ச்சி ...

தமிழ் மக்கள் மீது இலங்கை அரசும் அதன் கைகூலிகளாக இயங்கும் யாழ் வைத்தியசாலை நிர்வாக மும் மேற்கொள்ளும் இந்த அடக்குமுறைகளுக்கு எதிராக தாயகத்திலும், புலத்திலும் இயங்கும் தமிழ் தேசிய ஊடகங்கள் தமது கண்டனங்களை பதிவுசெய்ய வேண்டும் என்பதுடன், இலங்கை மனித உரிமைகள் அமைப்பு, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அமைப்பு மற்றும் எல்லைகள்கடந்த ஊடகவியலாளர் அமைப்பு போன்றவற்றில் இது தொடர்பான முறைப்பாடுகளும் மேற்கொள்ளப் படவேண்டும் என இலக்கு ஊடகம் கேட்டுக் கொள்கின்றது.

## ஜனாதிபதித் ... தொடர்ச்சி ...

இவ்வாறான நிலையில் கிழக்கில் தமிழ்-முஸ்லீம் மக்களிடையே குழப்பங்களை ஏற்படுத்தி அதன்மூலம் சுய அரசியல் இலாபம் பெறும் வகையிலான செயற்பாடுகளை பிள்ளையான் -அதாவுல்லா போன்றவர்கள் முன்னெடுக்கும் நிலைமைகள் காணப்படுகின்றன. அண்மையில் அம்பாறை மாவட்டத்தின் காரைதீவில் பிள்ளையானின் கட்சியினால் நடாத்தப்பட்ட மகாநாட்டில் முற்றுமுழுதாக தமிழ் -முஸ்லீம் மக்களின் உறவுகளுக்கு எதிரான கருத்துகளே முன்வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் இளைஞர்கள் அதாவது தமிழர்களின் போராட்டத்திற்கு பின்னர் பிறந்த பிள்ளைகளிடம் முஸ்லீம்கள் தொடர்பான தவறான விதைப்புகள் பிள்ளையான் குழுவினால் திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றன. மறுபுறத்தில் அதாவுல்லா, ஹாரிஸ் போன்ற தீவிர இஸ்லாமிய செயற்பாட்டு அரசியல்வாதிகளினால் தமிழர்கள் தொடர்பில் முஸ்லீம்கள் மத்தியில் கடுமையான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

உணர்ச்சி ரீதியான விடயங்கள் சமூகங்களுக்குள் ஊடுறுவி அவர்களை நிலைகுலையச் செய்யும் வகையிலான செயற்பாடுகள் மிகவும் வேகமாக முன்னெடுக்கப்படுகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தினைப்பொறுத்த வரையில் இவர்களின் பருப்புகள் வேகாது என்ற காரணத்தினால் அம்பாறை மாவட்டத்தில் இவை திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றன.

இவற்றினை தடுத்து நிறுத்தவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளபோதிலும் அதற்கான எந்த நடவடிக்கைகளும் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை.

இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலையானது கிழக்கில் உருவாகியிருக்கும் இந்த சூழ்நிலைக்கு ஏதுவானதாக உருவாக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஜனாதிபதி தேர்தலின் பின்னர் ஜனாதிபதி தேர்தல் நடாத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில் இரண்டு தேர்தல்களையும் இலக்குவைத்து இனவாத ரீதியான செயற்பாடுகளை இலங்கை சிங்கள பௌத்த பேரினவாதமும் அதனுடன் இணைந்த புலனாய்வுக்கட்டமைப்புகளும் முயற்சிகளை முன்னெடுத்துவரும் நிலையில் தமிழ் தேசியம் சார்ந்த பரப்பில் செயற்படுவோர் வெறும் தமிழ் பொது வேட்பாளர் என்ற விடயத்திற்குள் மட்டும் மூழ்கியுள்ளதுடன் எந்த சிங்கள ஜனாதிபதியை ஆதரிப்பது என்பதில் மட்டுமே கவனம் செலுத்தும் நிலைமையும் காணப்படுகின்றது.

கிழக்கில் சிறுபான்மை சமூகங்கள் மத்தியிலும் ஏனைய பகுதிகளில் சிறுபான்மை சமூகங்களுக்கும் பெரும்பான்மையினங்களுக்கும் இடையிலும் இவ்வாறான மோதல் நிலைமைகள் ஏற்படுமானால் இந்த நாட்டில் சிறுபான்மை சமூகம் மீண்டும் மிக மோசமான நிலைக்கு செல்லும் நிலைமைகள் ஏற்படும்.

எனவே இவற்றினை இனங்கண்டு தமிழ்-முஸ்லீம் உறவுகளை வலுப்படுத்தவும் சிங்கள பௌத்த மேலாதிக்கவாதிகளின் திட்டங்களை முறியடிக்கவும் பொறிமுறைகள் உருவாக்கப்பட்டு அனைத்து இன மக்களும் ஒன்றுபட்டு செயற்படவேண்டிய காலமாகவுள்ளது. தமிழ் மக்களைப்பொறுத்த வரையில் தமக்குள்ள வேறுபாடுகளை களைந்து இந்த விடயத்தில் ஒன்றுபட்டு செயற்பட முன்வரவேண்டும்.

• • •

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.